வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.06.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 187 | பக்கங்கள் : 16

# கொரோனா ஒழிப்பு சமருக்கு பூரண ஒத்துழைப்பு தாருங்கள்

## மக்களிடம் பிரதமர் மஹிந்த வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 08

“பயணத் தடையின்போது மக்களுக்குப் பல்வேறு பிரச்னைகள் ஏற்படும் என அறிந்த போதிலும் ஓர் உயிரின் மதிப்பறிந்து அரசு முன்னெடுத்துவரும் கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டங்களுக்கு முழு ஆதர வளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” 15



## 47 பேர் நேற்று மரணம்!

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் கொரோனாவால் மேலும் 47 பேர் மரணமாகினர் என்று சுகாதாரப் பிரிவினரால் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் இலங்கையில் கொரோனாவால் மரணமடைந்தவர்களின் தொகை 1,789 ஆக அதிகரித்துள்ளது.

## முரண்பாடு எதுவும் இல்லை; ஐக்கியமாக இருக்கின்றோம்

### சஜித் கட்சி விசேட தீர்மானம் நிறைவேற்றம்

கொழும்பு, ஜூன் 08

ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித முரண்பாடும் கிடையாது எனவும், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதியதோர் அரசை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அக்கட்சியின் உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில் சஜித் தலைமையில் தொடர்ந்தும் இயங்குவது எனவும், புதியதொரு 15

## வங்கிகளை உடன் மீண்டும் திறக்கவும்

### மத்திய வங்கி அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் வர்த்தக மற்றும் விசேட வங்கிச் செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இந்த வாரத்தில் வர்த்தக மற்றும் விசேட வங்கிகள் சாதாரண செயற்பாடுகளுக்காக இயங்காது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் வங்கி செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் மத்திய வங்கி ஆளுநர் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைய, சுகாதார அமைச்சால் உரிய வழிகாட்டல்கள் 15



## பாரதியின் பாடலை மேற்கோள்காட்டி ‘பேஸ்புக்’கில் பதிவிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 08

உலக உணவு பாதுகாப்பு நாள் நேற்றாகும். இதனையொட்டி ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தனது முகநூலில் பாரதியின் பாடலை மேற்கோள்காட்டி தமிழில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவு வருமாறு:-

“தனி ஒருவருக்கு உணவு இல்லையெனின் இந்த பூலோகமே மனிதருக்கு தேவையில்லை” என்றவாறு பாடினான் பாரதி.

ஆனால், ஒவ்வொரு நாளும் இந்தப் 15

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## கைதானோருக்கு தனியான தடுப்புக்காவல் நிலையம்!

கொழும்பு, ஜூன் 08

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைத் தடுத்துவைத்திருப்பதற்கு தனியான தடுப்பு நிலையம் ஒன்று பயன்படுத்தப்படும் என ஜனாதிபதி கோட்டாபய 15

## 2,610 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 610 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 7 ஆயிரத்து 943 ஆக அதிகரித்துள்ளது. 15

## தடுப்பூசி ஏற்றலில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முன்னுரிமை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

கொரோனா வைரஸுக்கு எதி ரான தடுப்பூசித் திட்டத்தில் 60 வயதுக்கு மேற் பட்டோருக்கு முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய கொரோனாத் தடுப்புச் செயல 15

## இரு குழந்தைகள் உட்பட யாழில் 80 தொற்றாளர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

வடக்கு மாகாணத்தில் நேற்று 86 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில் 80 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். இந்தத் தொற்றாளர்களில் இருவர் குழந்தைகள் என்றும் தெரிய வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் 276 பேரின் மாதிரிகளும், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 604 15




## உயர்வடைகின்றது தொற்றாளர் எண்ணிக்கை; பயணத்தடை மூலம் எதிர்பார்த்த பலன் இல்லை

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாட்டால் எதிர்பார்த்த பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த மே 21ஆம் திகதி முதல் நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு அமுல் படுத்தப்பட்ட போதும், தொற்றாளர்கள் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கின்றதே தவிர குறையவில்லை என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயணக் கட்டுப்பாடு அமுல் படுத்தப்பட்டாலும் மக்களால் அது சரியாகப் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது...!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நமது தலைவர்கள் நினைவுகூர்ந்த விதம் குறித்து நேற்றைய பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதனை கவனித்த மூத்த போராளி ஒருவர் லண்டனிலிருந்து பேசினார். மூத்த போராளி என்றதும் நமக்கெல்லாம் ஞாபகத்திற்கு வருபவர்கள் விடுதலைப் புலிப்போராளிகள் தான். ஆனால், அவர் அதற்கும் முந்தைய போராளி. மாணவர் பேரவையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர்.

நேற்று நான் இங்கே குறிப்பிட்டிருந்த அந்த கறுப்புக் கொடி போராட்டத்தின் போராட்ட வீரர்களில் அவரும் ஒருவர். "நீர் சொன்னது எல்லாத்தையும் அப்பிடியே ஏற்றுக் கொள்ள முடியாதுதான், ஆனாலும் சொல்ல வேண்டிய ஒண்டை சொல்லாமல் விட்டுவிட்டீர் ஐசே", என்றார் அவர்.

எனக்கு எதை விட்டுவிட்டதைச் சொல்கிறார் என்பது புரியவில்லை. "சொல்லாமல் விட்டவை ஏராளம். இது ஒரு சின்னப் பத்தி, அதுகூட எழுதத் தொடங்கும்போது சிறிதாக இருந்தது இப்போது ஊதி ஊதிப் பெருத்துவிட்டது. அதனால் பல விடயங்களை சொல்ல முடிவதில்லைத்தான். ஆனால், நீங்கள் எதைப்பற்றி குறிப்பிடுகிறீர்கள் என்று சொன்னால் தானே", என்றேன்.

"முள்ளிவாய்க்கால் நினைவை ஒவ்வொருவரும் தத்தமது வீட்டுக் கோடிகளிலும், பூட்டிய அறைக்குள்ளும்தான் நடத்தி முடித்தார்கள். ஆனால், அவர்கள் எல்லோருமே ஒரு விடயத்தில் ஒற்றுமையாக இருந்திருக்கிறார்கள்" என்றார்.

தொடர்ந்து பூடகமாகவே சொல்லிக்கொண்டிருந்தவர் ''அது என்ன எல்லோரும் ஒரே விடயத்தில் ஒற்றுமை" என்று கேட்ட பின்னர்தான் பதில் சொன்னார். "எல்லோரும் தத்தமது நினைவுகூரல்களை தமது ஸ்மாட் போன்களிலாவது படம் எடுத்து எல்லா ஊடகங்களுக்கும் அனுப்புவதற்கு ஒருவரும் தவறவில்லை கண்டீரோ...", என்றார்.

"என்ன ஐசே, இதையே இவ்வளவு பெரிய விசயமாக சொல்லுறீர். அதுக்குப்போய் லண்டனில இருந்து போன் எடுக்கிறீர்", என்றேன்.

அவருக்கு தான் சொல்லவந்த விடயத்தை ஊர்க்குருவி சீரியசாக எடுக்கவில்லை என்பது கோபத்தை உண்டாக்கி யிருக்க வேண்டும்.

"ஐசே? அப்ப அவையின்ர நோக்கம் எல்லாம் தாங்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை செய்தனாங்கள் எண்டு மற்றவைக்குச் சொல்லுறதைத் தவிர, அதில ஒரு உண்மைத் தன்மை இல்லையே. அவர்கள் அந்த இறந்துபோன ஆத்துமாக்களுக்கு உண்மையான அஞ்சலி செய்யிற தெண்டால் அதற்கு எல்லாம் 'பப்பிளிசிற்றி' செய்ய நினைச்சிருக்க மாட்டடினம் தானே", என்றார் அவர்.

அவர் இதைச் சொன்னபோது அந்தப் பத்திரிகையிலேயே வந்திருந்த மற்ற ஒரு செய்தியைப் பார்க்கவில்லைப் போலும். தியாகி சிவகுமாரனின் நினைவு தினத்தையும் கொண்டாட பொலிஸார் தடை. பிரதேச சபை தவிசாளர் தடையையும் மீறி அஞ்சலி செலுத்தினார் என்று படத்தோடு ஒரு செய்தி வந்திருந்தது.

தடையை மீறி செய்வது என்றால், சிவகுமாரனின் சிலைக்கு போய் அஞ்சலி செய்திருந்தால் அது தடையை மீற செய்ததுதான். ஆனால், தனது வீட்டுத் தோட்டத்தில் தனி ஆளாக நின்று மெழுகுதிரி கொழுத்திவிட்டு அதனை படம் எடுத்து ஊடகங்களுக்கு அனுப்புவதைப் பார்த்து நிச்சயம் சிவகுமாரனின் ஆத்மாவே வெதும்பியிருக்கும்.

**- ஊர்க்குருவி**

# வைத்திய நிபுணரின் கருத்துக்கு முன்னுரிமை வழங்கி கொரோனாவுக்கு உடன் முடிவு கட்டுக!

*அரசிடம் திஸ்ஸ விதாரண எம்.பி. வலியுறுத்து*



**கொழும்பு, ஜூன் 08**

**"விசேட வைத்திய நிபுணர்களின் கருத்துக்களுக்கு அரசு முன்னுரிமை வழங்குவது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் கொரோனா பிரச்னைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க முடியும்."**

**- இவ்வாறு ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தொற்று நோயியல் நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள காலப் பகுதியில் பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்ள விசேட செயல்திட்டத்தை அரசு செயற்படுத்த வேண்டும்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது அமுலில் உள்ள பயணத் தடையால் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

அங்காடி விற்பனை ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வரும் இந்தச் சூழலில் அதனைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதி பெரும்பாலான மக்களிடம் இல்லை.

எனவே, சிறந்த திட்டங்களைச் செயல்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கின்றேன்" - என்றார்.

(இ)

# அதிவேக நெடுஞ்சாலை, மேம்பாலங்கள் நிர்மாணம் பிரதமரால் அங்குரார்ப்பணம்

*கொழும்பு, ஜூன் 08*

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையில் தூண்களைக் கொண்டு நிர்மாணிக்கப்படுகின்ற நெடுஞ்சாலை உள்ளிட்ட 5 திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.



சுகாதார வழிமுறைகளுக்கு அமைய சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக அலரிமாளிகையி லிருந்து இப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகரங்களைப் போன்றே, நாட்டின் ஏனைய பிரதான நகரங்களிலும் நிலவும் கடுமையான வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர் பில் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

அதற்கமையவே, பிரதமரின் ஆலோசனைக்கமைய, கொழும்பு - கண்டி நகரங்களை அண்மித்ததாக நிலவும் பாரிய வாகன நெரிசல்களுக்குத் தீர்வாக மேம்பாலங்களை அமைக்கவும், புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையில் அதிவேக நெடுஞ்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

இதன்படி, 16.4 கிலோ மீற்றர் தூரத்தை கொண்ட புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையான குறித்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் நான்கு கட்டங்களாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த அதிவேக வீதிக்காக 134.9 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சீனாவின் ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்தால் புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரை உயரமான நெடுஞ்சாலையை 36 மாதங்களில் நிறைவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


இதற்கு மேலதிகமாக கொஹூவளை சந்தியில் ஒரு மேம்பாலமும், கண்டி, கெட்டம்பே சந்தியில் ஒரு மேம்பாலமும் அமைக்கப்படவுள்ளன.

கொம்பனித்தெரு ரயில் கடவை ஊடாக நீதியரசர் அக்பர் மாவத்தையையும், உத்ராநந்த மாவத்தையையும் இணைக்கும் வகையில் மேம்பாலம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதேவேளை, பேரே வாவி மற்றும் கொம்பனித்தெரு ஊடாக சாரணர் வீதி மற்றும் சிற்றம்பலம் ஏ கார்டினர் வீதிகளை இணைக்கும் மற்றொரு மேம்பாலமும் அமைக்கப்படவுள்ளன. (இ)

# 'சினோபார்ம்' தடுப்பூசிகள் இரண்டையும் ஏற்றிக்கொண்டால் மட்டுமே பயன் உண்டு

*இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண அறிவிப்பு*



*கொழும்பு, ஜூன் 08*

"சினோபார்ம் மற்றும் சினோ வெக்ஸ் தடுப்பூசிகளைப் பொறுத்த வரையில் முதலாம் தடுப்பூசி யாக சினோபார்மை ஏற்றிக் கொண்டவர்கள் இரண்டாம் தடுப்பூசியையும் ஏற்றியாக வேண் டும். இல்லையேல் எந்தப் பலனும் கிடைக்காது."

- இவ்வாறு ஔடத உற்பத்திகள், விநியோக ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உலகில் மூன்று விதமான தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் எம்.ஆர்.என்.ஏ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பைசர் மற்றும் மொடேனா தடுப்பூசிகளாகும்.

அதேபோல் வைரஸின் வெளிப்படையான புரோட்டின்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக், அஸ்ட்ராஸெனகா மற்றும் ஜோன்சன் அன்ட்ஜோன்சன் தடுப்பூசிகள். அதேபோல் கொரோனா வைரஸை பலமிழக்கச் செய்யும் வைரஸைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள சினோபார்ம் மற்றும் சினோவக்ஸ் தடுப்பூசிகள் ஒவ்வொன்றும் தன்மைகளில் மாறுபட்டவை" - என்றார்.

(இ)

ஈழநாடு
Eelanadu
08.06.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## பயணத் தடை தோல்வியா?

கடந்த இரு வாரங்களாக பயணத் தடை நீடித்துவருகின்றது. ஆனால், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையவில்லை. அது, மேலும் அதிகரித்துச் செல்கின்றது. இந்த நிலையில், மேலும் பயணத் தடையை நீடிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இதனை அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகின்றது. அதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள பயணத் தடையால் பயனில்லை. மேலும் இறுக்கமான நடவடிக்கைகள் அவசியம். நாட்டை முழுமையாக முடக்காவிட்டால் எந்தவகையிலும் இதனை நிறுத்தமுடியாது. நிலைமைகளை இப்போதே சரியாக அணுகாவிட்டால் பெருமளவானோர் உயிரிழக்க நேரிடலாம் - இவ்வாறு மருத்துவத்துறை சார்ந்தவர்கள் தொடர்ச்சியாக எச்சரித்துவருகின்றனர்.

இந்த நிலையில், நடைமுறையிலுள்ள பயணத்தடை நீடிக்குமா அல்லது மேலும் இறுக்கமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்குமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. தற்போது நடைமுறையிலுள்ள பயணத்தடையை நீடித்தால்கூட, அதனால் கொரோனா தொற்று பரவலை பெருமளவு கட்டுப்படுத்த முடியாது என்றே பலரும் கூறுகின்றனர். தற்போது அதிகரித்துச் செல்லும் வேகத்தை நோக்கும் போது அது உண்மையான கூற்றாகவே இருக்கின்றது.

இது ஒரு தேசிய நெருக்கடி. இவ்வாறான நெருக்கடிகளின்போது, அதனை கையாள்வதற்கு இறுக்கமான நடைமுறைகள் அவசியம். கொரோனா விவகாரத்தை வெற்றிகொண்டிருக்கும் நாடுகள் அனைத்துமே சில இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டே, நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்றன. மேற்குலகில், ஆரம்பத்தில் தளர்வான நடைமுறைகளே முன்னெடுக்கப்பட்டன. ஆனால், மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் நிலைமைகள் மோசமடைந்தன. பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இதன் பின்னரே ஊரடங்கு முறைமை கடைப்பிடிக்கப்பட்டது. முழுமையான முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்மூலம் மக்களின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

ஆனால், இலங்கையில் இந்த நடைமுறை முழுமையாக பின்பற்றப்பட்டவில்லை. இதில் தளர்வுகள் காணப்பட்டன. இந்த தளர்வுகளே தற்போது பிரச்னையாக உருவெடுத்திருக்கின்றது. ஆனால், தற்போது நிலைமைகள் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது. இனி, தளர்வான கட்டுப்பாடுகளால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது. இந்த விடயத்தில் மக்களை அச்சுறுத்தி எதனையும் செய்யமுடியாது. மேற்கு நாடுகளில் தண்டப் பணம் அறிவிடப்பட்டதுபோன்ற, நடைமுறைகள்மூலம் மக்களின் நடமாட்டத்தை குறைக்கலாம். வாகனங்களின் அனுமதி பத்திரங்களை பறிமுதல் செய்யலாம். அனைத்தையும் சட்டரீதியாகவே முன்னெடுக்கவேண்டும்.

அடுத்த பிரச்னை, தடுப்பூசி விவகாரம். இதனையும் இதுவரையில் வெற்றிகரமாக அரசாங்கத்தினால் ஆரம்பிக்க முடியவில்லை. கொரோனா விவகாரம் என்பது, முற்றிலும் புதிய பிரச்னை. இதனை எதிர்கொள்வதற்கான தேசிய பொறிமுறை ஒன்று நாட்டில் இல்லை. இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு விடயத்தில் அரசாங்கம் தீவிரம் காட்டியது. இறுதியில் அதனை நிறைவேற்றுவதில் வெற்றியும் பெற்றது. ஆனால், தேசிய நெருக்கடியாக மாறியிருக்கும் கொரோனா பெருந்தொற்று விவகாரத்தை எதிர்கொள்வதற்கான தேசிய பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. ஏற்கனவே இதுதொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியினர் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் எதிர்கட்சியின் ஆலோசனைகளை கருத்தில் கொள்ளுவதில் ஆர்வம் காட்டவில்லை. இன்றுவரை, கொரோனா விவகாரம் கட்சி அரசியலை தாண்டி பயணிக்கவில்லை. இதுவும் தற்போதைய நிலைமைக்கு ஒரு காரணம்.

# 'எக்ஸ்- பிரஸ் பேர்ள்' கப்பல் கடலடியில் இரகசியங்கள்!



*இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு அருகே 05 அபாயகரமான இரசாயன பொருட்கள் மற்றும் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுடன் தீ விபத்துக்குள்ளான எம்.வி எக்ஸ் - பிரஸ் பேர்ள் என்ற சரக்குக் கப்பல் கடலில் மூழ்கியுள்ளது. இந்த நிலைமையானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதாக எகோனொமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.*

*அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,*

*சீனாவில் தயாரிக்கப்பட்டதாக கூறப்படுகின்ற இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்திற்குள் நுழையும் நோக்கில் இலங்கை கடற்பரப் பில் விபத்துக்குள்ளானது. கப்பலில் இருந்த அபாயகரமான இரசாயன பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் குறித்த தகவல்கள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்டதா என்ற சந்தேக நிலை தோற்றுவித்தள்ளது. ஏனெனில் மூழ்கும் கப்பலின் அடிப்பகுதியில் காணப்படும் பொருட்கள் மற்றும் எண்ணெய் கசிவுகள் குறித்து ஆராய்வதற்காக ஆழ் கடல் சுழியோடிகளின் குறிப்பிட்டளவு தடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த சம்பவம் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், பாதுகாப்பு தொடர்பான அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது. இதனை உள்நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள். கப்பல் வங்காள விரிகுடா மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதி வழியாக கொண்டு செல்ல திட்டமிட்டிருந்த பெருந்தொகை இரசாயனங்கள் குறித்தும் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பியுள்ளது.*

*கடந்த ஏப்ரல் மாதத்தில், இலங்கையின் அனுமதியின்றி கதிரியக்க பொருட்களுடன் சீன கப்பலொன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் நுழைந்தது. பின்னர் இலங்கை அரசாங்கம் உடனடியாக வெளியேற்றியது.*

*இந்த பிராந்தியத்தில் சீனாவின் இவ்வகையான நகர்வுகள் குறித்து கொழும்பை தளமாகக் கொண்ட அதிகாரிகள் ஆச்சரியத்தை வெளியிட்டுள்ளனர். சீனாவின் ஜூன் சாங் ஹோாங் இன்டர்நேசனல் ஷிப்யார்ட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் தயாரிக்கப் பட்ட எம்.வி எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் கடலில் மூழ்கியுள்ள நிலையில் அதன் தரம் குறித்த தற்போது கேள்விகள் எழுந்துள்ளன.*

*இந்த கப்பல் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து கட்டார், இந்தியா மற்றும் இலங்கை வழியாக சிங்கப்பூர் செல்லும் வழியில் பயணித்திருந்தது. மே 19 திகதி இலங்கைக்கு வருவதற்கு முன்பு நைட்ரிக் அமிலம் கசிந்ததாகவும் அதில் மேலும் சில ஆபத்தான பொருட்கள் காணப்படுவதாகவும் தகவல் அளித்ததாக கூறப்பட்டது. கப்பலில் இருந்த 13 சீன பணியாளர்கள் கொழும்பில் இறங்கியுள்ளனர்.*

*இதையடுத்து மே 25 ஆம் திகதி கப்பலில் வெடிப்பு ஏற்பட்டது என்றும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் கப்பலில் இருந்த ஐந்து இந்திய பணியாளர்கள் இலங்கை அதிகாரிகள் மற்றும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடனும் தொடர்பிலிருந்துள்ளனர். இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை மீட்பு பணிகளுக்கு வந்துள்ளது.*


*ஜூன் 1ஆம் திகதி தீ பரவல் முழு அளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோதிலும் மறுநாள் கப்பல் மூழ்கியது. இந்த கப்பில் 25 தொன் நைட்ரிக் அமிலம் மற்றும் பிற இரசாயனங்களை பொருட்கள் காணப்பட்டுள்ளது.*

*சுற்றுச்சூழல் உரிமைகள் அமைப்பான சுற்றுச்சூழல் நீதி மையம் மற்றும் மீனவர்களின் ஆர்வலர்கள் இலங்கை அரசாங்கத்திற்கும் எம்.வி. எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலின் நிர்வாகத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளனர்.*

*மேலும் அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் பிளாஸ்டிக்குகளை ஏற்றிச் சென்ற கப்பலில் ஏற்பட்ட தீயினால் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் அழிவை உள்ளூர் அதிகாரிகள் தடுத்திருக்க வேண்டும். கப்பலின் கப்டன் மற்றும் குழுவினரை தடுத்து அவர்களுக்கு எதிராக குற்றவியல் மற்றும் சிவில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.*

*எதிர்காலத்தில் இதுபோன்ற பேரழிவுகளைத் தடுக்க பொருத்தமான சட்டங்களையும் விதிகளையும் உருவாக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை கடலுக்குள் நுழைவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே, மே 11 அன்று கப்பலின் குழுவினர் ஒரு அமில கசிவு பற்றி அறிந்துள்ளனர். இந்நிலையில் உள்ளூர் அதிகாரிகள் கப்பலை இலங்கைக்குள் அனுமதித்திருக்கக் கூடாது என்பதே சூழலியலாளர்களின் கருத்தாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூன் - 8 செவ்வாய்க்கிழமை**
பிலவ வருடம் - வைகாசி 25
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**08.06.2021**

**மேடம்**
இயந்திரப் பணியாளர்களுக்கு இன்று நல்ல செய்தி வரும். எண்ணம் ஒன்று நிறைவேறும். தெய்வீக சிந்தனைகள் அதிகரிக்கும். பெண்களுக்கு தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**இடபம்**
வயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்படாதபடி கவனமாக இருங்கள். தெரியாத துறைகளில் அதிகம் முதலீடு செய்ய வேண்டாம். பொறுப்புடன் செயலாற்றுவது நல்லது. அதிக கவனம் தேவை.

**மிதுனம்**
எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். முன்னேற்றத்தில் சிறுசிறு குறுக்கீடுகளும், தடைகளும் ஏற்படும். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**
வீட்டில் புதிய பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. சிறிய வெற்றிகளை மட்டுமே இன்று எதிர்பார்க்கலாம். தடைப்பட்டிருந்த விஷயம் ஒன்று நடக்க ஆரம்பிக்கும்.

**சிம்மம்**
சுய முயற்சியால் வளர்ச்சி காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்பினால் சிறிய வளர்ச்சியை காணலாம். சுபிட்சம் கூடும். உற்சாகமான சூழ்நிலை நிலவும்.

**கன்னி**
பொறுப்புடன் செயல்பட்டால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். சிறியதொரு சாதனை செய்து பாராட்டுப் பெற்று மகிழ்வீர்கள். எந்தவிதப் பிரச்னையிலும் மாட்டாமல் ஒதுங்குவது நல்லது.

**துலாம்**
கௌரவத்தைக் குறைக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதீர்கள். முக்கியமான எண்ணம் ஒன்று நிறைவேறுவதால் மகிழ்வீர்கள். ஆரோக்கியம் சம்பந்தமான சிறு உபாதைகள் ஏற்படும்.

**விருட்சிகம்**
வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். குடும்ப நலத்தில் குறை இருக்காது. நல்ல நேரம் ஆரம்பித்துவிட்டது. அளவோடு வளர்ச்சி காணலாம். சிறிய நன்மைகளை பெற பெரிய முயற்சிகளை எடுப்பீர்கள்.

**தனுசு**
அளவோடு நலம் உண்டாகும். புதியவர்களிடம் எச்சரிக்கை தேவை. பெரிய அளவில் நன்மைகளை எதிர்பார்ப்பதற்கில்லை. கவனம் தேவை. செலவுகளும் தொல்லைகளும் உண்டாகும்.

**மகரம்**
வேலை தேடுபவர்கள் சலிப்படைய வேண்டாம். நம்பிக்கை தேவை. இன்று வியாபாரத்தில் ஓரளவு வளர்ச்சி காண்பீர்கள். முயற்சியின் பேரில் பெண்களுக்கு புதிய பொருட்கள் சேரும்.

**கும்பம்**
வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். உடன் பிறந்தவர்களின் செயல் ஒன்றால் நலம் உண்டாகும். பொறுப்பு கூடும். குடும்பத் தலைவருக்கு சிக்கனம் தேவை.

**மீனம்**
சிறிய அளவில் நன்மை ஏற்படும். பேச்சில் கவர்ச்சி இருக்கும். பண நடமாட்டம் அதிகரிக்கும். வாகன சேர்க்கை வரலாம். விரும்பத்தக்க உறவினர்களின் செயல்பாடு ஒன்று மகிழ்ச்சி தரும்.

# ‘தி பேமிலி மேன் 2’ தொடரை தடை செய்ய மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துவோம்

## தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் உறுதி





சென்னை, ஜூன் 08

தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் காட்சிகள் உள்ளதால் ‘தி பேமிலி மேன் 2’ தொடரை தடை செய்ய மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துவோம் என தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் நேற்று தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில், தகவல் தொழில்நுட்பத்துறை ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்துறை செயலாளர் நீரஜ் மிட்டல், எல்காட் நிர்வாக இயக்குனர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மனோ தங்கராஜ், கொரோனா பரவல் மற்றும் மரணங்களை குறைக்க முதலமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். மக்களின் பொருளாதார சூழலை கருத்தில் கொண்டு சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

‘தி பேமிலி மேன் 2’ தொடரில் தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் காட்சிகள் உள்ளதாக குற்றம் சாட்டிய அவர், அதனை தடை செய்ய வேண்டும் என்பது தான் தமிழக அரசின் நிலைப்பாடு என்றும், அதனால் தான் மத்திய அரசுக்கு வலியுறுத்தினாரென மீண்டும் வலியுறுத்தப்படும் என்றும் கூறினார்.

# சசிகலா மீண்டும் கட்சிக்குள் வரமுடியாது அவருக்கு அ.தி.மு.கவுடன் சம்பந்தமில்லை

## முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் திட்டவட்டம்



சென்னை, ஜூன் 08

“கருவாடு மீனாகிவிட முடியாது என்று காளிமுத்து சொன்னார். ஆனால், கருவாடு கூட மீனாகிவிடலாம். சசிகலா ஒருநாளும் அ.தி.மு.கவுக்குள் வர முடியாது. ஓராயிரம் சசிகலா வந்தாலும் அ.தி.மு.கவை ஒன்றும் செய்ய முடியாது” என முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் ஆவேசமாகக் கூறினார்.

அ.தி.மு.கவுக்குள் தலைவர்களிடையே ஒற்றுமையில்லை என்கிற செய்தி வெளியாகும் நிலையில், சசிகலா திடீர் திடீர் எனத் தொண்டர்களுடன் பேசி ஒலிப்பதிவு ஒன்றை வெளியிட்டார். இது அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சசிகலா தொண்டர்களிடம் பேசும்போது, “நான் விரைவில் வந்துவிடுவேன். அனைத்தையும் சரி செய்துவிடலாம்” என்று பேசிவருவதால் அ.தி.மு.கவுக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதற்குப் பின்னரும் பதிவை வெளியிட்ட சசிகலா, “அனைத்தையும் மாற்றுவேன்” எனப் பேசிவருகிறார்.

இந்நிலையில் விழுப்புரத்தில் பேட்டி அளித்த முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்திடம் சசிகலா ஓடியோ குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அமைச்சர் சி.வி.சண்முகம் அளித்த ஆவேச பதில்:

“இந்த இயக்கத்தில் சசிகலா எங்கே இருந்தார் என்பதே தெரியாது. அவருக்கும், அ.தி.மு.கவின் சரித்திரத்திற்கும் சம்பந்தமே இல்லை. அவர் ஜெயலலிதாவின் வீட்டிலே, அவருக்கு உதவியாளராக வந்தார். அவ்வளவுதான். அவருக்கும் அ.தி.மு.கவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர் இப்போது என்ன வேஷம் போட்டாலும், என்ன நாடகம் போட்டாலும் எதுவும் நடக்காது. எங்கள் மூத்தவர் காளிமுத்து, கருவாடு மீன் ஆகாது என்று சொன்னார்.

இது தமிழ்நாட்டில் எல்லோருக்கும் தெரிந்த வசனம். கருவாடு கூட மீனாகிவிடலாம். ஆனால், அ.தி.மு.கவில் சசிகலா ஒருநாளும் உறுப்பினராக முடியாது” என அவர் தெரிவித்தார்.

# சென்னையில் குறையவடையும் கொரோனா

சென்னை, ஜூன் 08

சென்னையில் கொரோனா தொற்று குறைய துவங்கியுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் சென்னையில் ராயபுரம் பகுதியை தவிர அனைத்து மண்டலங்களிலும் கொரோனா தொற்று குறைந்துள்ளது என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. ஒவ்வொரு வார முடிவிலும் கிடைக்கும் தரவுகளை ஒப்பீடு செய்து கிடைக்கும் தரவுகள் அடிப்படையில் 13 மண்டலங்களில் கொரோனா தொற்று குறைந்துள்ளதை உறுதி செய்துள்ளது சென்னை மாநகராட்சி.

ராயபுரத்தில் கொரோனா தொற்று வீதம் 0.7% ஆக உயர்ந்துள்ள நிலையில், அதன் அருகே இருக்கும் திரு.வி.க. நகரில் தொற்று அதிகரிப்பு விகிதம் 0% ஆக பதிவாகியுள்ளது. சென்னையின் சராசரி தொற்று விகிதம் தற்போது -5.5% ஆக உள்ளது. 15 மண்டலங்களில் 8 மண்டலங்களில் சென்னையின் சராசரி தொற்று விகிதத்திற்கும் குறைவாகவே பாதிப்புகளை கொண்டுள்ளது.

கடந்த வார ஆரம்பத்தில் 38,680 ஆக இருந்த கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது 24,290 ஆக குறைந்துள்ளது. கொரோனா தொற்று அதிகம் உள்ள பகுதிகளாக கோடம்பாக்கம் (2320) முதலிடம் வகிக்கிறது.

2258 நபர்கள் அண்ணா நகரில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். வளசரவாக்கத்தில் 2154 நபர்களுக்கும், அடையார் மற்றும் தேனாம்பேட்டையில் முறையே 2093 மற்றும் 2076 நபர்களும் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.







# கனமழையால் கம்பஹாவில் பல இடங்கள் நீரில் மூழ்கின

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் பெய்துவரும் கனமழை காரணமா கம்பஹா மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்று முன் தினம் பெய்த கடும் மழை காரணமாக கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த மாவட்டத்தில் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரையில் மூவர் உயிரிழந்தனர், அத்துடன் ஒருவர் காணமல்போயுள்ளார்.

அதேநேரம், அந்த மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களால் 13 பிரதேச பிரிவுகளில் 39 ஆயிரத்து 742 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 381 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மேலும் 13 மாவட்டங்களுக்கு தடுப்பூசி திட்டம் விஸ்தரிப்பு

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

**தடுப்பூசித் திட்டத்தை மேலும் 13 மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**



இந்தத் திட்டத்திற்கான சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதன்படி மாத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, பொலநறுவை, குருநாகல், புத்தளம் மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு தலா 25,000 'டோஸ்' வழங்கப்படும்.

மேலும் நுவரெலியா, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு 50,000 'டோஸ்' வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தடுப்பூசித் திட்டம் அரசியல் மயமாக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாட்டில் உள்ள அனைவருக்கும் விரைவில் தடுப்பூசி செலுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

# ஜூன் மாதம் முழுதும் நாடு முடக்கப்படுமா?

## 11 ஆம் திகதி இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணத்தடையை நீடிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 11 ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடை பெறும் செயலணிக் கூட்டத்தின்போதே இது குறித்து ஆராய்ந்து தீர்மானிக்கப்படும் என சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜூன் மாதம் முழுவதும் பயணத் தடையை அமுல்படுத்துமாறும், குறைந்தபட்சம் ஜூன் 21 ஆம் திகதி வரையாவது கடும் கட்டுப்பாடுகள் அவசியம் என சுகாதார தரப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பயணத்தடை நீடிப்பு குறித்து அரச தரப்பில் இருந்து இன்னும் அதிகாரபூர்வமான தகவல் எதுவும் வெளியாகவில்லை. 11 ஆம் திகதியன்றே அறிவிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# பயண கட்டுப்பாட்டை ஜூன் –21 வரை நீடிக்குமாறு வலுவடையும் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 08

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் பயணக் கட்டுப்பாட்டை மேலும் ஒரு வாரத்துக்கு நீடித்து ஜூன்-21 வரை அமுல்படுத்துமாறு சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்படாவிட்டால் இதுவரை விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் எதிர்பார்த்த பயனை அடைய முடியாது எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது தினசரி 3,000 இற்கும் அதிகமான தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுவருவது ஆபத்தான போக்காகும். கட்டுப்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடித்தால் மட்டுமே ஓரளவு நெருக்கடியிலிருந்து மீள முடியும் எனவும் சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனை வலியுறுத்தி இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த 02 -ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கையில் மே 21 ஆம் திகதி முதல் பயணக் கட்டுப்பாடு அமுல் செய்யப்பட்டது. 25 ஆம் திகதி மட்டும் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. மீண்டும் அன்று இரவு முதல் ஜூன் 7 வரை பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

சுகாதார அதிகாரிகளின் வலியுறுத்தலுக்கு அமைய கட்டுப்பாடு மீண்டும் ஜூன்-14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதனை ஜூன் 21 வரை மேலும் ஒரு வாரம் நீடிக்குமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# 7 நாட்களில் நாட்டில் 301 கொரோனா மரணங்கள்!

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் மே -31 முதல் நேற்று முன் தினம் ஜூன் -06 ஆம் திகதி வரையான கடந்த 7 நாட்களில் 301 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த 07 நாட்களில் தினசரி சராசரியாக 43 என்ற அடிப் படையில் உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மே 31 - 43 பேர், ஜூன் 01- 43 பேர், ஜூன் 02 -39 பேர், ஜூன் 03 -42 பேர், ஜூன் 04 - 48 பேர், ஜூன் 05- 40 பேரின் மரணங்கள் அறிவிக்கப்பட்டன. நேற்று ஜூன் 06 - 46 கொரோனா மரணங்கள் அறிவிக்கப்பட்டன.

இலங்கையில் கடந்த இரு வாரங்களுக்கு மேல் பயணத் தடை என்ற பெயரிலான சமூக முடக்கல் உத்தரவு அமுலில் உள்ளபோதும் கொரோனா தொற்று நோயாளர் தொகை யும் மரணங்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிய தாய் வவுனியாவில் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 08

இறுதிப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் வவுனியாவில் உயிரிழந்தார்.

2009 இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடர் மாஸ்டரின் தாயாரும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு வின் ஊடகப்பேச்சாளர் அ.ஈழம் சேகுவேராவின் தாயாரும் ஆகிய தேவகி அம்மா, புற்றுநோயினால் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார். வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட அவர் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தேடியலைந் திருந்த நிலையில் மகனை காணாமல் மரணமானார்.

மகன் பற்றிய நம்பகமான செய்தி அறியாமலும், நீதி மறுக்கப்பட்ட நிலையிலும் இறைபதம் எய்திய தாயாருக்கு தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வவுனியா சங்கத்தினர் தமது இரங்கல் அஞ்சலிகளை தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் 73 பேர் உட்பட கிழக்கில் 114 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

மட்டக்களப்பு, ஜூன் 08

மட்டக்களப்பு மாவட்டத்தில் 73 பேர் உட்பட கிழக்கு மாகாணத்தில் நேற்று மேலும் 114 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் - 73 பேர் அம்பாறை மாவட்டத்தில் - 32 பேர் திருகோணமலை மாவட்டத்தில் - 09 பேர் இவ்வாறு நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்தில் மேலும் 114 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளம், மண்சரிவால் 995 வீடுகளுக்கு சேதம்!

## 2 இலட்சத்து 71 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 08

**அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது. ஐவர் காயமடைந்துள்ளனர். இருவர் காணாமல்போயுள்ளார் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று காலை விடுத்துள்ள நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன் 10 மாவட்டங்களில் 67 ஆயிரத்து 613 குடும்பங்களைச்சேர்ந்த 2 இலட்சத்து 71 ஆயிரத்து 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 978 வீடுகள் பகுதியளவிலும், 17 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் மேற்படி மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 6 ஆயிரத்து 107 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 806 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள், 106 பாதுகாப்பு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கம்பஹா, இரத்தின புரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை, காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் வாழ்ப வர்களே சீரற்ற காலநிலை யால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 77 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 08

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து மேலும் 77 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று காலை முதல் விடுவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, நுவரெலியா, மாத்தளை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த கிராமசபை பிரிவுகளை இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பயணத்தடை அமுலில் உள்ளதால், விடுவிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கும் அந்த நடைமுறை பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டது,

## புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை திறக்கப்படுவதை எதிர்த்த 10 பேர் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 08

புதுக்குடியிருப்பில் ஆடைத்தொழிற்சாலை திறக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா பரவலை கட்டுப்படுத்த ஆடைத் தொழிற்சாலையை தற்போதைக்கு திறக்கவேண்டாம் என குரல் கொடுத்த பெண்கள் ஆறு பேர் உட்பட்ட பத்து பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை நேற்றுக் காலை திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் புதுக்குடியிருப்பின் பெண்கள் அமைப்புக்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதேச சபை உறுப்பினர் ஜனமேஜயந் உட்பட்டவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் அங்கு சென்ற பொலிஸார் முதலில் ஆறு பேரை கைது செய்திருந்தனர். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் புதுக்குடியிருப்பு பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் ஆறு பேர், பிரதேச சபை உறுப்பினர் ஜனமேஜயந் உட்பட 10 பேர் உள்ளடங்கியுள்ளனர்.

## கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 913 பேர் கைது

கொழும்பு, ஜூன் 08

நேற்று மாலை வரையான கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 913 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்திற்கு நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் சோதனைகள் இடம்பெற்றதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்போது 2,348 வாகனங்களில் பயணித்த 4,504 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதில் தனிமைப்படுத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளை மீறியதற்காக 54 வாகனங்களில் பயணித்த 107 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

## கர்ப்பவதிகளுக்கும் நாளை முதல் தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 08

கர்ப்பவதி தாய்மார்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை புதன்கிழமை முதல் தொடங்கும் என்று மகப்பேறியல் மற்றும் பெண் நோயியல் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார்.

தற்போது நாட்டில் சுமார் 2 இலட்சத்து 75 ஆயிரம் கத்பவதிகள் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுவதாக பிரதீப் டி சில்வா கூறினார்.

அதன்படி, ஆபத்தில் இருக்கும் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை பல அளவுகோல்களின் கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு சுகாதார அலுவலகத்தின் பிலியந்தல மருத்துவ அலுவலரிடமும், கொழும்பு கோட்டை தெரு பெண்கள் மருத்துவமனையிலும் நடைபெறும்.

## வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, ஜூன் 08

இலங்கையர்கள் நாடு திரும்புவது குறித்த புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவினால் இந்த வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 14 நாட்களுள் இந்தியா, வியட்நாம், தென்னாபிரிக்கா மற்றும் தென்னமெரிக்க நாடுகளுக்கு சென்றிருந்த எந்தவொரு பயணிக்கும் இலங்கை வருவதற்கு அனுமதி இல்லையென அண்மையில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அறிவிப்பொன்றை விடுத்திருந்தது.

எனினும் மேற்படி நாடுகளுக்கு சென்றிருந்த அதேவேளை கோவிட் தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொண்டுள்ள இலங்கையர்கள், இரட்டை குடியுரிமை கொண்டவர்கள், இந்த நாடுகளில் இடைமாறல் பயணிகள் இலங்கை வர அனுமதிக்கப்படுவர். இவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் 14 நாள் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

இலங்கை வரும் இலங்கையர்கள், இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் ஆங்கிலத்தில் அல்லது முறையான மொழிபெயர்ப்பை கொண்ட கொரோனா எதிர்மறை பரிசோதனை முடிவை கொண்டு வரவேண்டும்.

தரையிறங்குவதற்கு 96 மணி நேரம் முன்னதாக செய்யப்பட்ட பி.சி.ஆர் அல்லது 48 மணி நேரத்தின் முன்னர் செய்யப்பட்ட அன்ரிஜென் சோதனை அறிக்கையை கொண்டு வரவேண்டும்.

இருப்பினும், புறப்படுவதற்கு 72 மணிநேரத்துக்குள்ளான எதிர்மறை பி.சி.ஆர் சோதனை அறிக்கையை விமான நிறுவனங்கள் கோரக்கூடும்.

புதிய வழிகாட்டலின்படி, அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை பெற்ற 14 நாட்களின் பின் நாட்டுக்கு வரும் இலங்கையர்கள், இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் வீட்டு தனிமைப்படுத்தலுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோர் கட்டாயமாக 14 நாட்கள் சுயத்தனிமைப் படுத்தலை கடைப்பிடிக்க வேண்டும்.

வீட்டு தனிமைப்படுத்தலுக்கு அனுமதிக்கப்பட்டவர்கள், தமது வீடுகளுக்கு சென்றதும் பிரதேச சுகாதார உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கவேண்டும். 14 நாட்களின் பின் பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளவேண்டும்.

ஜூன் 30 வரை இது நடைமுறையில் இருக்கும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சகாயமாதாபுரத்தில் மேலும் 22 பேர் உட்பட வவுனியாவில் மேலும் 30 பேருக்கு தொற்று

வவுனியா, ஜூன் 08

வவுனியா சகாயமாதாபுரத்தில் மேலும் 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 30 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா சகாயமாதாபுரத்தில் கொரோனா தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்ட நிலையில் முடக்கல் நிலை கடுமையாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கிராமத்தில் வசிக்கும் மக்களிடம் நேற்று முன்தினம் சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகளின் பிரகாரம் மேலும் 22 பேருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

# மாகாணசபை தேர்தலை நடத்தும் சாத்தியம் அரிது!

## ரொஷான் ரணசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 08

**மாகாண சபை தேர்தலை இவ்வருடம் நடத்துவதற்கான சாத்தியம் மிக அரிதாகவே காணப்படுகிறது. தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. ஆனால், தேர்தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் தற்போது காணப்படவில்லை என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**




அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாணசபை தேர்தல் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிற்போடப்பட்டது. பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் உள்ளூராட்சி தேர்தல் கடந்த 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தலின் பெறுபேறுகள் நல்லாட்சி அரசாங்கத்துக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் எதிராக காணப்பட்டது.

அரசியல் நோக்கத்துக்காக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்.

மாகாண சபைத் தேர்தலை எத்தேர்தல் முறையில் அதாவது பழைய தேர்தல் முறையிலா அல்லது புதிய தேர்தல் முறையிலா நடத்துவது என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது. இப்பிரச்னைக்கு தீர்வு காணாமல் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாது என்ற நிலை காணப்பட்டது.

மாகாண சபை தேர்தலை தொடர்ந்து பிற்போட வேண்டும் என்ற தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. ஆனால், அதற்கான பாதுகாப்பான சூழல் தற்போது கிடையாது. தேர்தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் காணப்படுகிறது. என சுகாதார தரப்பினர் குறிப்பிட்டால் தேர்தலை நடத்துவோம்- என்றார்.

# மட்டக்களப்பில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்



மட்டக்களப்பு, ஜூன் 08

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்கட்டமாக இன்று செவ்வாய்க் கிழமை முதல் கொரோனா தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் நேற்று மட்டக்களப்பில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 25 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளமைளள இன்று முதல் மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் ஒவ்வொரு சுகாதார திணைக்கள பகுதிகளிலும் ஆபத்து நிலை அதிகமுள்ள பகுதி மக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# 96 கிலோ கிராம் கஞ்சா நாகர்கோவிலில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 08

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையில் நேற்று காலை 96 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு ரோந்துப் பணியின்போது கரையோரத்தில் 3 சாக்குகளில் 96 கிலோ கிராம் கேரள கஞ்சா கண்டெடுக்கப்பட்டது.

(அ-03-2)

# வவுனியாவில் ஆயிரத்தை கடந்த தொற்றாளர் தொகை

வவுனியா, ஜூன் 08

வவுனியா மாவட்டத்தில் கொரொனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளதுடன் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் நேற்று முன் தினம் வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் 1040 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அநேகமானவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவில் கொரோனா தொற்று காரணமாக இதுவரை 17 பேர் மரணமடைந்தனர். அவர்கள் அனைவரும் பல் வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# திருமலையில் அவசரமாக தரையிறங்கியது விமானம்

கொழும்பு, ஜூன் 08

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திருகோணமலையில் அவசரமாக தரையிறங்கியது. இலங்கை விமானப்படையின் விமானிகளின் அடிப்படைப் பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்ட 'செஸ்னா 150' என்ற விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டது.

இந்த விமானம் திருகோணமலையின் நிலாவெளி கடற்கரைக்கு அருகிலுள்ள இறக்கண்டி பகுதியில் அவசரமாக தரையிறங்கியதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் எந்தவிதமான உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என்பதுடன், இரண்டு விமானிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

விமானிகளின் சாதுரியத்தினால் ஒரு பயங்கரமான விபத்தைத் தவிர்க்க முடிந்தது என்று இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த சம்பவம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# மதுபானம் கடத்தியவர் யாழ். சி.ஐ.டியால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 08

நாடு பூராகவும் பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில் அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் ஓட்டோவில் மதுபானத்தை விற்பனைக்காக எடுத்துச் சென்ற ஒருவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 300 பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அதே இடத்தைச் சேர்ந்வரே கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஊரிக்காடு மயானத்தில் சடலம் தோண்டி நகைகளை தேட முற்பட்ட இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 08

வல்வெட்டித்துறை ஊரிக்காடு மயானத்தில் சடலங்கள் அடக்கம் செய்யப் பட்ட இடத்தில் தங்க நகைகளைத் தேடி அகழ்வில் ஈடுபட்ட இருவர்கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் சந்தேக நபர்கள் இருவரும் அடக்கம் செய்யப்பட்ட சடலம் ஒன்றில் தங்க நகை இருப்பதாக அகழ்வில் ஈடுபட்டபோது வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், சந் தேக நபர்கள் இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(அ-03)






யாழ்.பொது நூலகம் எரியூட்டப்பட்ட தினம் தொடர்பில் அண்மைக் காலமாக சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில், நூலகம் எரியூட்டப்பட்ட காலத்தில் யாழ்.மாநகர ஆணையாளரகாவும், நூலகத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தவருமான வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் வெளிவிட்ட நேற்று முன்தினம் அறிக்கையின் முக்கியத்துவம் கருதி அதனை அப்படியே பிரசுரிக்கிறோம்.

# யாழ்ப்பாண நூலக எரிப்பு சில தெளிவுபடுத்தல்கள்

*1960 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்ற தொடங் கியதிலிருந்து 1989 ஆம் ஆண்டு முன்கூட்டியே ஓய்வுபெற்ற காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபையில் கணக்காளராக பணியாற்றிய 1968 - 1972 வரையான நான்கு ஆண்டுகள் தவிர முழுக் காலத்திலும் யாழ்ப்பாண மாநகர சபையில் சேவையாற்றியவன்.*

*அதிலும் குறிப்பாக 1975 முதல் 1988 இறுதிவரை ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் சேவையாற்றியவன். குறிப்பாக 1979 - 1983 நடுப் பகுதி தவிர, முழுக் காலத்திலும் தெரிவு செய்யப்பட்ட சபையின்றி மாநரக சபையை நிர்வகித்தவன். ஆகவே, யாழ்ப்பாண நூலகத்தின் அழிப்பு மற்றும் மீள்விப்பின் நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருந்தவன் நான். எனவே, அதன் வரலாற்றில் நேரடி பற்கேற்பும், சாட்சியும் ஆனவன் என்ற வகையில் கடந்த காலத்தில் வேண்டப் பட்ட சரியான தெளிவுபடுத்தல்களை நான் வழங்கியே வந்துள்ளேன்.*

ஆனால், இப்பொழுது உண்மைத் தரவுகள் திட்ட மிட்டு திரிவுபடுத்தப் படுவது கவலையளிப்பதும் எரிச்சலூட்டுவதுமாக உள்ளது.

நூலகம் எரிக்கப்பட்ட நாளை ஒரு விவாதப் பொரு ளாக்கி பட்டிமன்றம் நடத்தும் நிலைக்கு ஒரு சிலர் உள்ளாக்கியுள்ளனர். யாழ்ப்பாண பொது நூலகம் பற்றி எழுதும் அநேகமானோர் அது எரிக்கப்பட்டது 1981 ஜூன் முதலாம் திகதி இராப்பொழுது என்று எழுதும் போது, ஒரு சிலர் இல்லை 1981 மே மாதம் முப்பத் தொராம் திகதி என எழுதி இளைய சந்ததியினரிடையே குழுப்பத்தை உண்டாக்க முயல்கின்றனர்.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற நாச்சிமார் கோவிலடி கூட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் என்றும், இச் சூட்டுச் சம்ப வத்துக்கு முன்னரே நூலகம் எரிக் கப்பட்டு விட்டதாகவும், மாவட்ட சபைத் தேர்தல் 1981 மே 31 ஆம் திகதி நடைபெற்றதென்றும் பல குளறுபடியான, பொய்யான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, இவை பற்றிய தெளிவு படுத்தல்கள் பல ஊடகங்களுக்கு எம்மால் இம்முறை வழங்கப்பட் டுள்ளன. நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டம் என்பதும் யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981 ஜூன் மாதம் முதலாம் திகதி இரவோடு இரவாக எரிக்கப்பட்ட தும், யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர் தல் 1981 ஜூன் நான்காம் திகதி நடைபெற்றதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதுவரை கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இரண்டு விடயங்களை எம்முடன் சம காலத்தில் மாநகர சபை யில் சேவையாற்றிய தீவிர தமிழ்த் தேசிய உணர்வாளரும், தமிழரசுக் கட்சியின் வளரச்சியில் பெரும் பங்காற்றியவரு மான உரும்பிராய் சா.ஆ.தருமரத்தினம் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் அப்படியே தரப்படுகின்றன.

### நூலக எரிப்பு பற்றிய செய்தி வெளியிடப்பட்டமை

"1981 யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபைத் தேர்தல் அசம்பாவிதங்களின் போது தேர்தல் கடமை புரிவதற்காக அனுப்பப்பட்டிருந்த விசேட காவல் துறையினர் யாழ்.விளையாட்டரங் கிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மே 31 ஆம் திகதி சம்பவத்திருந்த வன்செயல் களைத் தொடர்ந்து ஊடரங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டிருந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் யாழ். பொது நூலகம் அதனது 98 ஆயிரம் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளுடனும் 1981 ஜூன் முதலாம் நாள் நள்ளிரவினில் தீயினால் பொசுக்கப்பட்டது."

"அப்பொழுது யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டு வந்த ஒரே நாளோடான 'ஈழநாடு'பத்திரிகையும் சமகாலத்தில் அதே இரவில் எரிக்கப் பட்டிருந்தமையினால் தலைநகர் கொழும்பில் இருந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஒன்றுதானும் யாழ். பொது நூலகம் தீக்கு இரையாக்கப்பட்ட செய்தியை பிரஸ்தாபியாது இருந்தமையினால் யாழ். நகருக்கு வெளியே யாழ்ப்பாண மாவட்டத்திலும் கூட வெறும் வதந்தியாக அது பரவியிருந்ததே தவிர செய்தியாக பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கவில்லை."

"தீவின் எந்தவோர் ஊடகம்தானும் யாழ்.பொது நூலகம் தகனம் செய்யப்பட்டமையைச் செய்தியாக வெளியிடாதிருந்தமை கட்டுரையாளரைப் பெரிதும் வருத்திற்று. ஆகவே, மனித உரிமை நலன்களின் மீது பெரும் அற்பணிப்புடன் ஈடுபாடு கொண்டவராகப் பணியாற்றி வந்த பண்டத்தரிப்பு சட்டத்தரணி பி.எவ். சேவியரிடம் கட்டு ரையாளர் அது விடயத்தைச் சுட்டிய போது இன்று மாலை 5.00 மணிக்கு முன்பாக யாழ். பொது நூலகத்தின் எரிந்து போன பாகங்களைக் காண்பிக் கும் ஒளிப் படப் பிரதிகளை என்னிடம் தருவாய் ஆகின் அவற்றிற்கான செல வினை யானே உனக்குத் தருவேன் என்றும், யாழ். பொது நூலகம் தகனம் செய்யப்பட்டதை உலகச் செய்தியாக மாற்றித் தருகிறேனா இல்லையா பார் என எனக்குச் சவால் விட்டார் சட்டத் தரணி சேவியர்."

**"நூலகம் எரிக்கப் பட்ட நாளை ஒரு விவாதப் பொருளாக்கி பட்டிமன்றம் நடாத்தும் நிலைக்கு ஒரு சிலர் உள்ளாக்கியுள்ளனர். யாழ்ப் பாண பொது நூல கம் பற்றி எழுதும் அநேகமானோர் அது எரிக்கப்பட்டது 1981 ஜுன் முதலாம் திகதி இராப் பொழுது என்று எழுதும் போது, ஒரு சிலர் இல்லை 1981 மே மாதம் முப்பத் தொராம் திகதி என எழுதி இளைய சந்ததியினரி டையே குழுப்பத்தை உண் டாக்க முயல்கின்றனர்."**

"கடல் படையினரது பிரசன்னத் தைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ்.பொது நூ லகத் தின் எரிந்து கொண்டி ருந்த தோற்றத்தை காண்பிக்கும் ஒளிப் படங்களை தமது உத்தியோகத் தேவையின் பொருட்டாக எடுப்பித் திருந்தார் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம்."

"அப்போது நிலவிய சூழ்நிலையில் யாரும் ஒளிப்படம் எடுப்பதற்கு யாழ்.பொது நூலகத்தை அண்மித்தல் அசாத்தியம் என்பதைப் புரிந்து கொண்ட கட்டுரையாளர் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்தை அணுகி சட்டத்தரணி சேவியர் கட்டுரையாளருக்கு விடுத்திருந்த சவாலை எடுத்துரைத்திருந்தார். உடனடியாகவே தொலைபேசி மூலம் தமக்கு எரிந்து போன நூலகத்தின் பல்வேறு தோற்றங்களையும் ஒளிப்படப் பிரதிகளை எடுத்துத் தந்தவரிடம் அவற்றின் மற்றுமோர் ஒளிப் பிரதியை தமக்கு தரும்படி அவரை பணித்து விட்டு தமது பாதுகாப்பில் வைத்திருந்த மேற்படி ஒளிப் படங்கள் உள்ளடக்கும் இரு புத்தகங்களையும் கட்டுரையாளரிடம் தந்தார்.

அவற்றில் இருந்து பெறப்பட ஒளிப்பட பிரதிகள் சட்டத்தரணி சேவியர் மூலம் அன்று மாலையே தலைநகர் கொழும்பு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் விமானத்தில் பயணித்த ஓர் இளம் சட்டத்தரணியிடம் சுங்கப் பரிசோதனைப் பீடத்தை அப்பயணி கடந்து சென்றதும் ஒப்படைக்கப்பட்டன. சென்னையில் மேற்படி ஒளிப்படங்களைப் பெற்றுக் கொண்ட மறவன்புல சச்சி (மறவன்புலோ சச்சிதானந்தன்) அவற்றிலிருந்து மேலும் பல பிரதிகளை அங்கு பெற்றுக் கொண்டதன் பின் தம்மால் கூட்டப்பட்டிருந்த சர்வ தேசிய ஊடகவியலாளர் மாநாட்டில் ஒளிப்படங்களை ஆதாரமாகச் சமர்ப்பித்து தகவல் வெளியிட்டிருந்தார்.

மறுவிநாடியே தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் பெரிதான திரவிட சிற்பவியல் பாணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த யாழ். பொது நூலகம் அதன் புத்தக சேர்வுகள் 98 ஆயிரம் தேடல்கரிய கையெழுத்து பிரதிகள் தீக்கி ரையாக்கப்பட்டமை உலகச் செய்தியாக மாறிவிட்டது. மேற்படி தகவல் செய்தியாக வெளியிடப் பட்டிராத அச்சு, வானொலி, ஒளிபரப்பு ஊடகங்களே கிடையாது. சர்வதேச சஞ்சிகைகள் யாவும் அதனை முதன்மைச் செய்தியாக பிரஸ்தாபித்திருந்தனர். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்திடமிருந்து பெறப் பட்ட ஒளிப்படப் பிரதிகள் மூலமே அச்சாதனை நிலைநாட்டப்பட்டிருந்தது."

### நட்டஈடு வழுங்கல்

"யாழ்.பொது நூலகத்திற்கு தனிநபர் ஆணைக்குழு (லயனல் பெர்னாண்டோ ஆணைக்குழு) பரிந்துரைத் திருந்த இழப்பீட்டுத் தொகை ஒரு கோடி 20 இலட்சம் ரூபா அரசாங்கப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டிருக்க வில்லை. யாழ். பொது நூலகத்துக்கு அரசின் பணத்தி லிருந்து நட்டஈடு தரப்படுவது யாழ். பொது நூலகத் தைத் தகனம் செய்த குற்றப் பொறுப்பை ஏற்றுக் கொள் வதாக இருக்கும் என்பதால் போலும் அவற்றுக்கு மாறாக குடியரசு தலைவர் நம்பிக்கை நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபா தொகையை விடுவித்து வங்கியில் குடியரசுத் தலைவரின் பெயரில் யாழ். பொது நூலகப் புனரமைப்பு நிதி எனும் ஒரு புதிய கணக்கினைத் திறந்து அதிலிருந்து பெறப்பட்ட 9 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை குடியரசுத் தலைவரின் நிவாரண நிதியாக அனுப்பி யிருந்தார்.

ஆயின் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் பெறப்பட்ட அத்தொகைக்கான பற்றுச்சீட் டில் "வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டின் ஒரு பாகமாகவே ஏற்றுக் கொண்டிருந்தார். பற்றுச்சீட்டில் அவ்வாறாக குறிப்பிட்டிருந்தார்" என்று திரு. சா.ஆ. தருமரத்தினம் அவர்கள் 2013 இல் வெளியிட்ட தமது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இவர் இப்பொழுது கொழும்பில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு சிபார்சு செய்த நட்டஈடான ஒரு கோடி 5 இலட்சம் ரூபாயில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து 20 இலட்சம் ரூபாயே மாநகர சபைக்கு வழங்கப்பட்டது.

■

**சீ.வீ.கே.சிவஞானம்**
அவைத் தலைவர்,
வடக்கு மாகாண சபை.
மற்றும் முன்னாள் ஆணையாளர், யாழ். மாநகர சபை.



# அமெரிக்க பிரேரணையால் இலங்கை ஏன் பதற்றமடைகிறது?

அகிலன்

அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் சபை யில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை இலங்கை அரசாங்கத்தை பெரும் பதற்றத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. தீர்மாத்தைக் கைவிடச் செய்வதற்கான இராஜதந்திர காய்நகர்த்தல்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது. வெளிவிவகார அமைச்சின் மூலமாகவும், பின்னர் அமெரிக்காவிலுள்ள இலங்கைக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க மூலமாகவும் இலங்கை முன்னெடுத்துள்ள நகர்வுகள் அமெரிக்காவின் தீர்மானத்தில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியும் எழுகின்றது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம், இலங்கையைக் குழப்பியமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தப் பிரேரணையானது, "2009 மே 18 ஆம் திகதி இலங்கையில் போர் முடிவடைந்த 12 ஆண்டுகளை அங்கீகரித்து, இழந்த உயிர்களைக் கௌரவித்தல், மற்றும் இலங்கை மக்கள் அனைவருக்கும் செழிப்பான எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக இலங்கையில் நீடித்த அமைதியான அரசியல் தீர்வை உறுதிப்படுத்துவதற்கான நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், புனரமைப்பு, இழப்பீடு, மறுசீரமைப்புக்கான ஆதரவை வெளிப்படுத்தல்" என்ற தலைப்பிலேயே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவின் இரண்டு பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடைய ஆதரவுடனேயே இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு அனுசரணை வழங்கியவர்களில் இருவர் அமெரிக்காவின் வெளிவிவகாரக் குழுவைச் சேர்ந்தவர்கள். காங்கிரஸிலுள்ள ஏழு உறுப்பினர்களுடைய ஆதரவுடன் இந்தப் பிரேரணை, அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவுக்கு இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. சுமார் 50 உறுப்பினர்களைக் கொண்டுள்ள வெளிவிவகாரக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே, பிரதிநிதிகள் சபையில் இது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### கொழும்பின் பதற்றத்துக்கு காரணமான விடயங்கள்

முள்ளிவாய்க்கால் நினைவுதினமான மே 18 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணை குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவந்திருந்த போதிலும், இலங்கை வெளிவிவகார அமைச்சு இரண்டு வாரங்களுக்கு பின்னரே விழித்துக்கொண்டது. பிரேரணை விவாதத்துக்கு வருவதற்கு முன்னதாக அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான இராஜதந்திரக் காய்நகர்த்தல்களை இலங்கை இப்போது காலம் பிந்திய நிலையில் ஆரம்பித்துள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய தாயகம் என்பது இந்தப் பிரேரணையில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் கடும் சீற்றத்துக்குப் பிரதான காரணம்.

ஏழு பக்கங்களைக் கொண்டுள்ள இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்கள் ஜெனிவா பிரேரரைணயின் தொடர்ச்சி போலவே உள்ளது. அதாவது, பொறுப்புக்கூறல் போன்றவற்றை இந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பாக இருக்கின்ற போதிலும், இந்தத் தீர்மானம் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களுடைய சுதந்திரத்துக்காகப் போராடிய ஓர் அமைப்பாக அங்கீகரிப்பது போன்ற வாசகம் காணப்படுகின்றது.

> **"ஏழு பக்கங்களைக் கொண்டுள்ள இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்கள் ஜெனிவா பிரேரணையின் தொடர்ச்சி போலவே உள்ளது. அதாவது, பொறுப்புக்கூறல் போன்றவற்றை இந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. விடுதலைப் புலிகளை தமிழ் மக்களுடைய சுதந்திரத்துக்காகப் போராடிய ஓர் அமைப்பு என இதில் குறிப்பிடப்பட்டிருப்பதும் இலங்கையின் சீற்றத்துக்குக் காரணம்."**

"இலங்கையில் அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் சுதந்திரப் போராட்ட அமைப்புக்களுக்கும் இடையில்...." என வரும் வாசகம் விடுதலைப் புலிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவது போல உள்ளது.

இவை அனைத்தையும் விட முக்கியமாக, வடக்கு - கிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களுடைய பாரம்பரிய தாயகப் பிரதேசம் என்பதை ஏற்றுக்கொள்வதாக அமைந்திருக்கின்றது. 1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய உடன்படிக்கையிலேயே வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது முதன்முதலாக சர்வதேச ரீதியான ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கமும் அதனை அப்போது ஏற்றுக்கொண்டிருந்தது. அந்த வகையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணை வெளியுறவு குழுவின் அனுமதியை பெறும் பட்சத்தில் அமெரிக்க செனட் சபையில் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கையின் அவசரமான இராஜதந்திர நகர்வுகள்

இந்தப் பின்னணியிலேயே இலங்கை அரசாங்கம் இப்போது அவசரமாக வாஷிங்கடனை நோக்கி காய்நகர்த்தத் தொடங்கியிருக்கின்றது. சில தினங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சின் மூலமாக கடுமையான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அமெரிக்கப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டதாக அந்த அறிக்கை அமைந்திருந்தது. குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக சாடுவதுடன், இந்தப் பிரேரணையின் பின்னணியில் விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்க செனட், வெளிவிவகாரக் குழு என்பனவற்றுக்கும் இந்த அறிக்கை அனுப்பப்பட்டது.

இரண்டாவது நகர்வாக அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க மூலமாக மற்றொரு ஆவணம், அமெரிக்கா காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. வெளிவிவகாரக் குழுவே இந்த யோசனை தொடர்பாக ஆராய்ந்து அடுத்த கட்டச் செயல்பாட்டுக்கு வழிவிட வேண்டியதாக இருப்பதால்தான் இலங்கை அரசாங்கம் அதனை இலக்குவைத்திருக்கின்றது. வெளிவிவகாரக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னதாகவே அதனைக் கைவிடச் செய்வதுதான் இலங்கை அரசாங்கத்தின் திட்டம்.

அதற்காகத்தான் இப்போது ரவிநாத் ஆரியசிங்க களமிறக்கப்பட்டுள்ளார். ரவிநாத் முன்னர் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும் பணியாற்றியவர். இலங்கையின் முன்னணி ராஜதந்திரிகளில் ஒருவர். அவரைக் களமிறக்குவதன் மூலமாக அமெரிக்காவைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் முற்படுவதாகத் தெரிகின்றது. சனிக்கிழமை அமெரிக்க வெளிவிவகாரக் குழுவிடம் கையளிக்கப்பட்ட ஆவணத்தில், அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் முன்வைக்கப்பட்ட இலங்கை குறித்த தீர்மானம் மீது எந்தவிதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டாம் என இலங்கை அவசரக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

### அமெரிக்கா என்ன செய்யப்போகிறது?

இலங்கையைக் கடுமையான நெருக்கடிக்குள் தள்ளக்கூடிய இவ்வாறான பிரேரணை ஒன்றை அமெரிக்கா தற்போதைய நிலையில் கொண்டுவருவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களின் செல்வாக்கும், செயல்பாடுகளும் இதன் பின்னணியில் இருந்திருக்கும் என நிச்சயமாக நம்பமுடியும். அமெரிக்காவில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் தீவிரமாகச் செயல்பட்டுவருகின்றமை அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அதனைவிட, சீனாவுடனான இலங்கையின் நெருக்கமும் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அமெரிக்கா எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கலாம்.

இந்த நிலையில் பல வாக்குறுதிகளுடன் அமெரிக்காவிடம் இலங்கை இப்போது சென்றிருக்கின்றது. அமெரிக்க காங்கிரஸில் நிறைவேறக்கூடிய ஒரு தீர்மானம், இந்தியாவிலும் சர்வதேச ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என இலங்கை அஞ்சுகின்றது. இந்த அச்சம் நியாயமானதுதான். ஜெனிவாவில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் உட்பட பல விடயங்கள் குறித்தும் இப்போது மீள வாக்குறுதியளிக்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது என்பது உண்மை. அதேவேளையில், தாயகக் கோட்பாடு, பிரிவினை வாதிகளை ஊக்குவிக்கும் என்ற கருத்து இலங்கை அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"அமெரிக்காவினுடைய இந்த நிலைப்பாடு தமிழர்களுடைய தாயகக் கோட்பாட்டினை சர்வதேச அரங்கிலே அங்கீகரிப்பதற்கானதும் எம்முடைய இனத்தினுடைய தேசியக் கோரிக்கைகளை படிப்படியாக வெற்றிபெற உதவும் நிலைப்பாடாக அவதானிக்கிறோம்" என ரெலோவின் பேச்சாளர் அண்மையில் கூறியிருந்தார். மற்றொரு விடயத்தையும் அவர் கூட்டிக்காட்டியிருந்தார்: "பூகோள சூழல்களை உணர்ந்து அதை எமது மக்களுக்கு சாதகமாக்க தமது பதவிகள், தேர்தல் நோக்கங்கள், கட்சி நலன்கள் , தற்பெருமை என்பவற்றை கடந்து நாம் இந்த கணத்தில் எம்மக்களுக்காக ஒன்றுபட்டு சர்வதேச அரசியல் சூழலை சாதகமாக்க செயல்படத் தவறினால், எந்த நியாயப் படுத்தலுக்கும் அப்பால், பாரிய வரலாற்றுத் துரோகத்தை இழைத்தவர்கள் ஆவோம்" எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்கா தன்னுடைய பூகோள நலன்களுக்காகத்தான் காய்நகர்த்துகின்றது. அதில் சந்தேகம் இல்லை. அதில் ஈழத் தமிழர் பிரச்னை ஒரு பகடைக்காயாக அவர்களுக்கு இருக்கலாம். ஆனால், அதன் பலனை பெற்றுக்கொள்ளக்கூடிய தூர நோக்கும், இராஜதந்திரத் திறனும் தமிழர் தரப்பில் இருந்தால், இதன் பலன்களை சாதகமாக்கிக்கொள்ள முடியும்!

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 4
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

2) ஒரு தடவை பல் துலக்க எடுக்க வேண்டிய பற்பசையின் அளவு



1 2 3 4


3) தாய்ப்பூனை குட்டியை வாயால் தூக்கிச் செல்ல பிடிக்கும் இடம்
1) கழுத்து 2) முதுகு 3) கால் 4) வயிறு

4) 
இப்படத்தில் உள்ளவர் தற்போதைய
1) பிரதமர் 2) ஜனாதிபதி
3) ஆளுநர் 4) முதலமைச்சர்

5) இலங்கையின் மாவட்டங்களின் எண்ணிக்கை
1) 9 2) 5 3) 25 4) 23

6) கூட்டுப் பசளை செய்யப் பயன்படுத்தப்படும் பொருள்
1) பொலித்தீன் 2) தகரத்துண்டுகள் 3) மரக்கட்டைகள் 4) இலைகுழைகள்

7) பின்வரும் செயல்களில் அனைவராலும் விரும்பப்படும் செயல்
1) கடுஞ்சொல் பேசுதல் 2) அன்பாகப்பழகுதல் 3) பொய் கூறுதல் 4) புறங்கூறுதல்

8) 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது
1) சிப்பி 2) நட்சத்திரமீன்
3) ஒக்டோபஸ் 4) கடற்குதிரை

9) பின்வருவனவற்றில் ஈருடக வாழி
1) டொல்பின் 2) நாரை 3) கிரேன் 4) பல்லி

10) பின்வருவனவற்றுள் மண்ணுக்குள் புற்று அமைத்து வாழாத பிராணி
1) உடும்பு 2) பாம்பு 3) கறையான் 4) சீல்

11) பின்வருவனவற்றில் பத்துக்கால்களை உடைய பிராணி
1) சிலந்தி 2) அழுக்கணவன் 3) இறால் 4) மரவட்டை

12) பிராணிகளினால் தமக்கே ஆன வாழ்விடங்களை அமைக்கும் போது வாழ்விடத்தில் வாயிலை கீழே வைத்துக் கூடு கட்டக்கூடியது
1) சிலந்தி 2) தூக்கணாங்குருவி 3) வீட்டுக்குருவி 4) குயில்

13) முலையூட்டியாக உள்ள மீனினம்
1) ஆமை 2) திமிங்கலம் 3) இறால் 4) கணவாய்

14) காலில் குளம்பு இல்லாத பிராணி
1) குதிரை 2) பசு 3) மான் 4) குரங்கு

15) பின்வருவனவற்றில் பறக்கக்கூடிய பறவை
1) தீக்கோழி 2) கிவி 3) நீர்க்காகம் 4) பென்குயின்

16) சுனாமி வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய பிராணி
1)யானை 2) காகம் 3) ஆமை 4) தும்பி

17) இலைகளின் கீழ்ப்புறத்தில முட்டையிடும் பிராணி எது?
1) அத்துப்பூச்சி 2) தூக்கணாங்குருவி 3) நாரை 4) எறும்பு


18) " புல்லைத் தின்று வளர்ந்திடுவேன், பாலை உமக்குத் தந்திடுவேன்
நான் யார்? நான் யார்?''
1) நான் 2) பால்க்காரன் 3) பசு 4) பூனை

19) பூமியில் உள்ள சமுத்திரங்கள்
1) 5 2) 7 3) 9 4) 6

20) ஆசியாக் கண்டத்தில் காணப்படும் நாடு எது?
1) பிலிப்பைன்ஸ் 2) தாய்வான் 3) நோர்வே 4) சூடான்


21) சிவனொலிபாதமலையில் உண்டாகும் ஆறு
1) கும்புக்கன் ஓயா 2) ஜின்கங்கை 3) மகாவலிகங்கை 4) வியாளன்

22) செந்நிறக்கோள் என அழைக்கப்படுவது
1) புதன் 2) புவி 3) செவ்வாய் 4) வியாழன்


23) 
இரவு வானில் இந்த நட்நத்திரக் கூட்டம் காணப்பட்டது இதன் பெயர்?
1) கார்த்திகை 2) தென் சிலுவை
3) பெருங்கரடி 4) துலாம்

24) 
இப்படம் பின்வருவனவற்றில் குறிப்பது எது?
1) ஸ்பிரேயர் 2) மூடி திறத்தல்
3) காற்றாலை 4) நீர் இறைத்தல்

25) கொம்பு வாத்தியம் எது?



1 2 3 4

26) 
இதன் பெயர் என்ன?
1) திசைகாட்டி 2) காற்றுமானி
4)காற்றுத் திசைகாட்டி 4) அம்புவில்

27) பொருட்களின் விற்பனையை அதிகரிக்க வியாபாரி எடுக்கும் நடவடிக்கை
1) கடனுக்குக் கொடுத்தல் 2) விலையினை கூட்டுதல்
3) விளம்பரம் 4) ஏலத்தில் விற்றல்

28) பின்வருவனவற்றில் ஆணிவேர் கிழங்கு
1) இஞ்சி 2) மஞ்சள் 3) மரவள்ளி 4) கரட்

29) இலங்கைக்கு அதிக வருமானம் திரட்டித்தரும் தாவரம்
1) கற்றாளை 2) தேயிலை 3) மிளகு 4) றப்பர்

30) பாதுகாப்பற்ற மின் பாவனையால் ஏற்படக்கூடியது
1) உயிரிழப்பு 2) அதிகவருமானம் 3) நஷ்ட ஈடு கோரல் 4) தீக்காயம்

ஈழநாடு

# கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மரணம் 2 பொலிஸார் பணியிலிருந்து நிறுத்தம்

## விசாரணைகள் ஆரம்பம் என்கிறார் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 08

**பாணந்துறைப் பகுதியில் பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.**

பாணந்துறை வடக்கு, வத்தல்பொல பிரதேசத்தை சேர்ந்த 48 வயதான குறித்த சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய் யப்பட்டு பொலிஸாரின் வாகனத்தில் ஏற்றப் பட்டுள்ளார்.

இதன்போது பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்வதற்காக வாகனத்திலிருந்து வெளியே பாய்ந்தபோது கடும் காயங்களுக் குள்ளான நிலையில் அந்த நபர் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமை யானவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தச் சம்பவத்தை தொடர்ந்து சந்தேக நபரைக் கைதுசெய்த பாணந்துறை - வடக்கு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் மற்றும் சார்ஜன்ட் ஒரு வரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். இதனிடையே, உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் தலைமையில் ஒழுக் காற்று விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறித்த மரணம் தொடர்பாக நீதி மன்ற விசாரணை மற்றும் பிரேத பரிசோ தனை என்பன நீதிமன்ற மருத்துவ அதிகாரி யால் நடத்தப்படவுள்ளதுடன், அதற்காக உதவிப் பொலிஸ் அதிகாரியொருவரின் தலை மையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள் ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



# 'குடு அஞ்சு'வின் உறவினர்களான இளம் தம்பதி கைது

கொழும்பு, ஜூன் 08

போதைப்பொருள் வியாபா ரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் இளம் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

'குடு அஞ்சு' என்ற போதைப் பொருள் விற்பனையாளரின் சகோதரனின் மகன் மற்றும் அவரிக் மனைவி ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 5 கிராம் ஐஸ் போதைப் பொருள், 14 இலட்சம் ரூபா பணம், பணத்தை எண்ணும் இரண்டு இயந்திரங்கள் மற்றும் நான்கு அலைபேசிகள் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ)



# மேலுமொரு டொல்பினின் உடல் கரையொதுங்கியது

கொழும்பு, ஜூன் 08

வாத்துவ - தல்பிட்டிய கடற்பரப்பில் உயிரிழந்த மற்றுமொரு டொல்பினின் உடல் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

கரையொதுங்கிய டொல்பின் உடல் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் முன் னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை, நாட்டின் மேற்கு கடற்பரப்பில் உயிரிழந்த 7 ஆமை கள் மற்றும் டொல்பின் ஒன்றின் உடல் நேற்றுமுன்தினம் கரை யொதுங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் தீப்பற்றியது முதல் கடல்வாழ் உயிரினங்கள் பல உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றமை சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கவலையை மேலும் அதிகரித்துள்ளது. (இ)

# இன்று மட்டும் சபை அமர்வு

கொழும்பு, ஜூன் 08

பாராளுமன்ற அமர்வை இன்று மாத்திரம் நடத்துவதற்கு நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இன்று காலை 10 மணி முதல் 4.30 மணி வரையில் பாராளுமன்ற அமர்வு இடம்பெறும்,

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது எனப் பாராளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித் துள்ளார். அமுலிலுள்ள பயணத் தடைக்கு மத்தியில் பாராளுமன்ற அமர்வுகளை எவ்வாறு நடத்திச் செல்வது தொடர்பில் இதன்போது கலந் துரையாடப்பட்டது. (இ)



# கொரோனா தடுப்பு நடவடிக்கை: பிரதமர் - இந்திய தூதுவர் பேச்சு

கொழும்பு, ஜூன் 08

இலங்கைக்கான இந்தியத் தூது வர் கோபால் பாக்லே மற்றும் பிரத மர் மஹிந்த ராஜபக்ச ஆகியோ ருக்கு இடையே நேற்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகை யில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இது, கடந்த ஒரு மாத இடை வெளியில் இருவரும் சந்தித் துக்கொண்ட இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

இலங்கை மற்றும் இந்தியா வின் கொரோனாத் தடுப்பு நட வடிக்கைகள் குறித்து இதன் போது விசேட கவனம் செலுத்தப் பட்டது. (இ)

# கப்பல் குறித்த விசாரணை: மற்றுமொரு குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 08

'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பலின் தொடர்பாடல் கட்டமைப்பைப் பகுப்பாய்வு செய்வதற்காக மற்று மொரு குழுவை நியமிக்க அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் தீர்மானித்துள் ளது.

கணனி குற்றப்பிரிவு அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்படவுள்ளனர் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிணங்க, கப்பல் தீப்பற்றிய சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தில் இருந்து மாத்திரம் இரண்டு குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன.

இதனிடையே, 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப் பல் மூழ்கிக்கொண்டுள்ள கடற்பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட நீர் மாதிரி ஆய்வுக்குட் படுத்தப்பட்டுள்ளது என அரச இரசாயனப் பகுப் பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)



# தனியார் வங்கிகளுக்கு பூட்டு!

## மீளத் திறக்கப்படும் திகதியும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

இலங்கையிலுள்ள தனியார் வங்கிகள் நேற்று முதல் சில நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவித்தலை குறித்த வங்கிகள் விடுத்துள்ளன. அத்துடன், ஒன்லைன் ஊடாக வங்கி சேவையை முன்னெடுக்கலாம் எனவும் அறிவித்துள்ளன.




பயணக் கட்டுப்பாடு, கொரோனாவைரஸ் பரவலுடனான தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டே தனியார் வங்கிகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

இதன்படி ஜூன் 7 முதல் ஜூன் 17 வரை தமது வங்கி மூடப்பட்டி ருக்கும் என அமானா வங்கி அறிவித்துள்ளது.

ஜூன் 13 வரை யூனியன் வங்கியும், ஜூன் 12வரை நேஷன் ட்ரஸ்ட் வங்கியும், ஜூன் 8வரை ஹட்டன் நஷனல் வங்கியும், ஜூன் 11 வரை என்.டி.பி. வங்கியும், ஜூன் 13 வரை கொமர்ஷல் வங்கியும், ஜூன் 11 வரை சம்பத் வங்கியும் மூடப்பட்டிருக்கும். அத்துடன், ஒன்லைன் ஊடாக சேவையை முன்னெடுக்குமாறு செலான் வங்கியும் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

ஈழநாடு





# பாகிஸ்தானில் ரயில் விபத்து: 36 பேர் பலி 50; பேர் படுகாயம்!

இஸ்லாமாபாத், ஜூன் 08

பாகிஸ்தானில் இரு அதி விரைவு ரயில்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் 36 பேர் பலியாகினர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் தெற்கு - சிந்து மாகாணம், கோட்கி நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த பலரின் நிலை ஆபத்தான கட்டத்தில் உள்ளது. இதனால் உயிரிழப்புகள் மேலும், அதிகரிக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விபத்தில் சிக்கி ரயில்களின் பல பெட்டிகளும் தடம்புரண்டன. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று காலை கோட்கி மாவட்டத்தில் ரைட்டி மற்றும் ஒபரோ ரயில் நிலையங்களில் இருந்து புறப்பட்ட ரயில்கள் ஒரே தண்டவாளத்தில் வேகமாக சென்றப்போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒரே தண்டவாளத்தில் செல்வதை உணர்ந்து ஓட்டுநர்கள் ரயிலை நிறுத்த முயன்றபோதும் கட்டுப்பாட்டை இழந்த ரயில்கள் மோதி விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

### கனடா சிறுவர் புதைகுழி விவகாரம்

# வருத்தம் தெரிவித்தார் பாப்பரசர் நிராகரித்தனர் பழங்குடி மக்கள்!

ஒன்ராறியோ, ஜூன் 08



கனடாவில் கத்தோலிக்க குடியிருப்பு பாடசாலைகளில் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் வருத்தம் தெரிவித்துள்ளார். ஆனால், இதை கனடாவின் பழங்குடி இனத் தலைவர்களும் - தப்பிப் பிழைத்தவர்களும் நிராகரித்து விட்டனர். அத்துடன், அவர் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

கனடாவில் முன்னைய கத்தோலிக்க குடியிருப்பு பாடசாலை ஒன்றில் 215 சிறுவர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. இந்த விவகாரத்தில் கத்தோலிக்க திருச்சபை மன்னிப்பு கோர வேண்டும் என்று கனடா அரசும், பழங்குடி இனத் தலைவர்களும் வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் தனது வாராந்த ஆசீர்வாத வழிபாட்டை நடத்திய பாப்பரசர் பிரான்சிஸ், கனடாவின் முன்னாள் கத்தோலிக்க குடியிருப்புப் பாடாசலை புதைகுழி விவகாரம் தொடர்பான செய்திகளால் தான் வருத்தமடைந்துள்ளார் என்று கூறினார்.

பூர்வீக மக்களின் உரிமைகள் மற்றும் கலாசாரங்களை மதிக்க வேண்டும் என்றும் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தினார். எனினும், அவர் நேரடியாக மன்னிப்புக் கேட்கவில்லை.

இந்த நிலையில் இந்த விவகாரத்தில் பாப்பரசர் வருத்தம் மட்டும் தெரிவித்து ஒதுங்கிக்கொள்வதை ஏற்க முடியாது என கனடிய பழங்குடி தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் கம்லூப்ஸ் நகரின் அருகிலுள்ள இந்திய குடியிருப்பு பாடசாலையில் அண்மையில் 215 சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இவை, அந்தப் பாடசாலை 1890 -1978 ஆம் ஆண்டுவரை இயங்கிய போது புதைக்கப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

அந்தக் காலத்தில் இந்தப் பாடசாலை பழங்குடியின சிறுவர், இளைஞர்களை வலுக்கட்டாயமாக ஒருங்கிணைத்து கத்தோலிக்க திருச்சபைகளின் கீழ் இயங்கின. இங்கு தங்கவைக்கப்பட்டவர்கள் உரிய வசதிகளின்றி மிக மோசமாக நடத்தப்பட்டனர்.

இதனால் பல மாணவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### 3 -17 வயதினருக்கு

# சீனாவில் தடுப்பூசி!

பீஜிங், ஜூன் 08

3 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு சீன அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

சினோவக் நிறுவனம் தயாரித்த தடுப்பூசியை 3 வயது முதல் 17 வயது வரையான சிறுவர்களுக்கு அவசரமாக பயன்படுத்த இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் தடுப்பூசியை எந்த வயதினரிடமிருந்து தொடங்குவது என்று முடிவு செய்யவில்லை என சினோவக் நிறுவனத் தலைவர் யின் வெய்டாங் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ள சினோவக் மற்றும் சினோபார்ம் மருந்துகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்க உபஜனாதிபதி பயணித்த விமானம் பழுது!

## முன்னெச்சரிக்கை செயலால் தப்பினார்

வாஷிங்டன், ஜூன் 08



அமெரிக்காவின் உபஜனாதிபதி கமலா ஹரிஸ் வெளிநாநாட்டுக்கு பயணித்த விமானத்தில் திடீரென கோளாறு ஏற்பட்டதால் விமானம் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது.

கௌதமாலா மற்றும் மெக்சிக்கோ நாடுகளுக்கு 2 நாள் பயணமாக கமலா ஹரிஸ் அமெரிக்காவின் மேரிலாண்டில் உள்ள அண்ட்ரூஸ் விமானதளத்தில் இருந்து நேற்று புறப்பட்டார்.


விமானம் புறப்பட்ட 30 நிமிடங்களில் விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு கண்டறியப்பட்டது. இதையடுத்து கமலா ஹரிஸ் பயணித்த விமானம் மீண்டும் அண்ட்ரூஸ் தளத்திற்கு திரும்பியது. விமானத்தில் இருந்து இறங்கிய கமலா ஹரிஸ் தாம் நலமுடன் இருக்கிறார் என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

உடனடியாக விமானத்தை சோதனையிட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள், இயந்திர கோளாறை சரி செய்தனர். இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாற்று விமானத்தில் கமலா ஹரிஸ் புறப்பட்டு சென்றார். (ஐ)

# பெண்ணின் உடலில் 32 முறை உருமாறிய கொரோனா வைரஸ்!

ஜொகன்னஸ்பேர்க், ஜூன் 08

தென்னாபிரிக்காவில் எச். ஐ. வி. நோயால் பாதிக்கப்பட்ட பெண்ணின் உடலில் கொரோனா வைரஸ் 32 முறை உருமாறியதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் அவர்கள் தெரிவித்தவை வருமாறு,

தென்னாபிரிக்காவில் எச். ஐ. வி. தொற்றால் மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ள 36 வயது பெண்ணுக்கு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொரோனா தொற்று ஏற்பட்டது. 2006ஆம் ஆண்டு முதல் எச். ஐ. வி. தொற்றால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு உடலில் நோய் எதிர்ப்பாற்றல் மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

இந்தச் சூழலில், 216 நாள்களாக அவரின் உடலில் கொரோனா வைரஸ் 32 வகைகளாக உருமாறியது. இதில் பிரிட்டன், தென்னாபிரிக்க வகைகளும் அடங்கும் - என்றனர். (ஐ)

# போகோ ஹறாம் அமைப்பின் தலைவர் அபூபக்கர் மரணம்!

நைகர், ஜூன் 08



நைஜீரியாவின் போகோ ஹறாம் பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபூபக்கர் ஷெகாவ் உயிரிழந்து விட்டார் என்று நம்பகத் தகுந்த ஆதாரங்களை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போகோ ஹறாம் அமைப்புக்கும் மேற்கு ஆபிரிக்க மாகாணத்தின் இஸ்லாமிக் ஆயுத அமைப்புக்கும் இடையே கடந்த மே 18 முதல் இடையே மோதிக் கொண்டன.

இதன்போது அபூபக்கர் ஷெகாவ், மேற்கு ஆபிரிக்க மாகாணத்தின் இஸ்லாமிய ஆயுதக் குழுவினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளார்.

எதிரிகள் சுற்றி வளைத்ததால் தன்னிடம் இருந்த வெடிப்பொருட்களை வெடிக்கச்செய்து போகோ ஹறாம் தலைவர் அபூபக்கர் ஷெகாவ் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

இந்த தகவலை மேற்கு ஆபிரிக்க மாகாணத்தின் இஸ்லாமிய ஆயுதக் குழு சர்வதேச செய்தி நிறுவனங்களிடம் உறுதிபடுத்தியுள்ளது. (ஐ)

# நியூஸி. - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி சமன்!

லோர்ட்ஸ், ஜூன் 08

நியூஸிலாந்து - இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள நியூஸிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதல் போட்டி, கடந்த 2ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அறிமுகவீரர் கொன்வேயின் அதிரடியான இரட்டைச் சதத்தின் உதவியால் அந்த அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 378 ஓட்டங்களைக் குவித்தது.



பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 275 ஓட்டங்களையே எடுத்தது. பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 169 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இரண்டாவது இனிங்ஸை அதிரடியாக ஆடியது இங்கிலாந்து. சிப்லி 60, ரூட் 40 ஓட்டங்களை குவித்தமையால் அந்த அணி 3 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் இறுதிநாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில்முடிவடைந்தது.

போட்டியின் நாயகனாக இரட்டைச்சதம் அடித்த டெவொன் கொன்வே தெரிவானார். (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் செரீனா தோல்வி!

பாரிஸ், ஜூன் 08

பிரபல ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸின் நான்காவது சுற்றில் தோல்வியடைந்தார்.

பாரிஸ் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் கஸகஸ்தான் நாட்டின் வீராங்கனையான எலீனா, 6-3, 7-5 என நேர் செற்களில் செரீனாவைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார். இதன்மூலம் முதல்முறையாக கிராண்ட்ஸ்லம் போட்டியில் காலிறுதிக்கு எலீனா தகுதி பெற்றுள்ளார்.

இந்தத் தோல்வியினால் செரீனாவின் 24ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான காத்திருப்பு மீண்டும்

தொடர்கிறது. இதுவரை 23 பட்டங்களை வென்றுள்ள செரீனா, இன்னும் ஒரு கிராண்ட்ஸ்லம் பட்டத்தை வெல்லும் பட்சத்தில் மகளிர் ரென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவரானமார்க்ரெட் கோர்ட்டின் சாதனையை சமன் செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# றொபின்சனுக்கு இடைக்கால தடை!

லண்டன், ஜூன் 08

எட்டு வருடங்களுக்கு முன்பு வெளியிட்ட சர்ச்சைக்குரிய ருவிட்களுக்காக இங்கிலாந்து வீரர் அலி றொபின்சனுக்கு இடைக்கால தடை விதித்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

நேற்று முன்தினம் முடிவடைந்த இங்கிலாந்து - நியூஸிலாந்து டெஸ்ட் போட்டியில் 27 வயதான அலி றொபின்சன் அறிமுகமானார். இதில் அவர் 7 விக்கெட்களை கைப்பற்றினார்.

இந்த நிலையில், 2012 - 2014 ஆண்டு காலப் பகுதியில் அவர் இனவெறி உணர்வுகளுடனான சர்ச்சைக்குரிய ருவிட்களை பதிவிட்டார். இதனால், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் கோரிக்கைகள் எழுந்தன.

இதைத் தொடர்ந்து சர்வதேச போட்டிகளில் பங்கேற்க றொபின்சனுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை இடைக்கால தடை விதித்துள்ளது. இதனால் நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் பங்கேற்க மாட்டார்.

இதேவேளை, றொபின்சன் தனது ருவீட்களுக்காக வருத்தம் தெரிவித்துள்ளார். அதற்காக மன்னிப்பும் கோரியுள்ளார். (ஐ)

# சர்வதேச போட்டிகளுக்கு அச்சுறுத்தலாகும் 'லீக்'குகள்

அபுதாபி, ஜூன் 08

உள்நாட்டு இருபது - 20 தொடர் அதிகரிப்பு சர்வதேச கிரிக்கெட்டுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் டூ பிளெசிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டுகளை சமநிலைப்படுத்த ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை உட்பட அனைத்து சிறந்த கிரிக்கெட் விளையாடும் நாடுகளும் தங்களது சொந்த இருபது-20 தொடர்களை கொண்டுள்ளன.

பல கரீபியன் தீவுகள் மற்றும் பிற பிராந்தியங்களை குழுவாகக் கொண்ட மேற்கிந்தியத் தீவுகளும் அதன் சொந்த தொடரை வைத்துள்ளது.

இது எதிர்காலத்தில் முன்னேற்றமடைந்தால், அது சர்வதேச விளையாட்டுக்கு உண்மையான அச்சுறுத்தலாக இருக்கும் என்று பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபது-20 தொடரில் விளையாடுவதற்காக அபுதாபியில் இருக்கும் டூ பிளெசிஸ், ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஒரு மெய்நிகர் செய்தி மாநாட்டில் கூறினார். (ஐ)





# பெர்லின் தொடரிலிருந்தும் விலகினார் நயோமி ஒஸாகா!

ரோக்கியோ, ஜூன் 08

பிரெஞ்சு ஓப்பன் தொடரிலிருந்து விலகிய பிரபல வீராங்கனையான நயோமி ஒஸாகா, பெர்லின் தொடரிலிருந்தும் விலகுகிறேன் என்று அறிவித்துள்ளார்.

நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஒஸாகா, 2020 அமெரிக்க ஓப்பன், 2021 அவுஸ்திரேலிய ஓப்பன் தொடர்களில் சம்பியனானார்.

செய்தியாளர் சந்திப்பினால் தனக்கு மன அழுத்தம் ஏற்படுவதால் பிரெஞ்சு ஓப்பன் தொடரில் அதனைத் தவிர்த்தார். இதற்காக போட்டி நிர்வாகம் அவருக்கு 15 ஆயிரம் டொலர்கள் அபராதம் விதித்தது. இதைத் தொடர்ந்து தன்னால் கவனச் சிதறல் ஏற்பட வேண்டாம் என்று கூறி அவர் தொடரிலிருந்து விலகினார்.

இந்த நிலையில், எதிர்வரும், 14ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் பெர்லின் தொடரிலிருந்தும் அவர் விலகியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும் விம்பிள்டன் தொடரில் ஒஸாகா பங்கேற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஐ)



# 2022இல் பிரதமராக நாமல் பதவியேற்பு?

## பிரபல ஜோதிடர் கணிப்பால் தெற்கு அரசியலில் பரபரப்பு

**கொழும்பு, ஜுன் 08**

**அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் இலங்கையின் புதிய பிரதமராகப்பதவியேற்பார் என்று பிரபல ஜோதிடர் விஜித ரோஹண விஜேமுனி கணித்துக் கூறியுள்ளார்.**

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்பார் என்று தானே முதலில் தெரிவித்தார் எனவும், அதன் பின்னரே ஏனைய ஜோதிடர்கள் கூறினர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ 1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பிறந்துள்ளார் எனவும், அவரது ஜாதகத்தின்படி இலங்கையின் ஜனாதிபதியாகும் கிரக யோகம் இருக்கின்றது எனவும் ஜோதிடர் விஜித ரோஹண விஜேமுனி குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் நாமல் பிறந்த யோகத்தில் சக்திவாய்ந்த கிரகங்கள் எதுவும் இல்லை என்றாலும், அதிஷ்டமான கிரக நிலை ஒன்று இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜோதிடர் விஜித ரோஹண விஜேமுனியின் இந்தக் கணிப்பால் கொரோனாவுக்கு மத்தியில் தெற்கு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள 65 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஜுன் 08

இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டு, வளர்ச்சிப் பயணத்தில் கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

2021 இலங்கை முதலீட்டுப் பேரவையின் முதலீட்டு மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த மாநாட்டில் 65 நாடுகளின் வர்த்தக மற்றும் முதலீட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஸ்ரீலங்கா முதலீட்டு சபை, லங்கா வர்த்தக சபை மற்றும் இலங்கை பங்குச் சந்தை ஆகியன ஒன்றிணைந்து 2021 இலங்கை முதலீட்டுப் பேரவையின் வருடாந்த மாநாட்டை ஏற்பாடு செய்தன.

2030ஆம் ஆண்டாகும் போது, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை இரு மடங்காக அதிகரிப்பதற்குரிய திட்டத்தை தாம் கொண்டுள்ளாரென ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக சமூகத்துக்குத் தேவையான பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளும் இலங்கையில் காணப்படுகின்றன எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பிராந்தியத்தின் முன்னணி சேவை வழங்கும் மத்திய இடமாக கொழும்பு போர்ட் சிட்டியை மாற்றுவதே தமது இலக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# போலி செய்திகள் பரப்புபவர்களை கண்காணிக்க விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜுன் 08

இலங்கையில் சமூக ஊடகங்களில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான போலியான செய்திகளைப் பரப்புபவர்கள் தொடர்பில் கண்காணிக்கக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலியான செய்திகளால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தொற்று, தடுப்பூசித் திட்டம் மற்றும் டெங்கு ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளையும் இவ்வாறு சமூக ஊடகங்களில் பகிரப்படும் தவறான தகவல்கள் பாதித்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

“போலிச் செய்திகளும் தவறான தகவல்களும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழு இது போன்ற செய்திகளைக் கண்டுபிடித்து அதனைப் பதிவிடுபவர்கள் மற்றும் பகிர்பவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்” எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (இ)

# பாடசாலைகள் மீளத் திறப்பு பற்றி இறுதி முடிவு இன்னமும் இல்லை

## கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 08

கொரோனா வைரஸ் தொற்றால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத் திறக்கும் திகதி தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“கொரோனா வைரஸ் தொற்று நிலைமை தொடர்பில் மீளாய்வுகள் இடம்பெற்று வருகின்றன. மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய சூழல் உருவானதும், விரைவில் பாடசாலைகள் திறக்கப்படும்” - என்றார். (இ)

# இளம் தம்பதியினர் சடலங்களாக மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஜுன் 08

மொனராகலை மாவட்டம், வெல்லவாய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் கணவன், மனைவியின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவல்களுக்கமை குறித்த வீட்டின் படுக்கை அறையில் இருந்து இருவரின் சடலங்களை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் வசித்த 36 வயதுடைய கணவனும், 21 வயதுடைய மனைவியுமே உயிரிழந்தனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பது தொடர்பாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்நிலையில் இது கொலையா? அல்லது தற்கொலையா? என்பது தொடர்பாக வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தரம் 1 வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

## உயர்நீதிமன்றத்தை நாடுகின்றது

கொழும்புள, ஜுன் 08

2022ஆம் ஆண்டு தொடக்கம் முதலாம் தரத்துக்கான வகுப்பறை ஒன்றில் 45 மாணவர்களை இணைத்துக்கொள்ள அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்காக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் ஆலோசனைகள் கடந்த 30ஆம் திகதி வெளியிடப்பட்ட நிலையில் அதில் வகுப்பறை ஒன்றுக்கு 40 மாணவர்களை மாத்திரம் உள்வாங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே முதலாம் தரத்தில் ஒரு வகுப்பில் 35 இற்கு மேற்பட்ட மாணவர்களை அனுமதிக்கக்கூடாது என உயர்நீதிமன்றம் 2012இல் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மீறி கல்வி அமைச்சு செயல்பட்டுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் குற்றஞ்சாட்டியுள்ளார். (இ)

## தடுப்பூசி...

ணியின் தடுப்பூசி வழங்கல் திட்டம் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கைக்கு அதிகமான தடுப்பூசிகள் கிடைக்கவுள்ள நிலையில், தடுப்பூசி வழங்கும் முன்னுரிமைப் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைப் பட்டியலில் இரண்டாம் இடம் வழங்கப்பட்டுள்ளது.

கர்ப்பவதி தாய்மார்கள் மூன்றாவதாகவும், அரச அதிகாரிகள் நான்காவதாகவும் தடுப்பூசி முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நோய்த் தொற்று ஏற்படும் தீவிர அபாயமுள்ள பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகள் உட்பட தொழிற்சாலை ஊழியர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

முன்னுரிமைப் பட்டியலில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 30 முதல் 60 வயதுடையவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது” - என்றார். (இ)

## இரு குழந்தை...

பேரின் மாதிரிகளும் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட 59 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதன் படி,

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரு வயதுக்கு இரு ஆண் குழந்தைகள் உட்பட 4, 8, 9 மற்றும் 16 வயதுகளையுடைய நான்கு சிறுவர்கள் உட்பட 27 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதேபோன்று, உடுவிலில் 17 பேரும், யாழ். மாநகரில் 7 பேரும், கரவெட்டி 8 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின்படி, நல்லூரில் 5 பேர், சாவகச்சேரி, காரைநகரில் தலா ஒருவரும், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 7 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 3 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 3 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், திருநெல்வேலி நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் ஒருவர் என 21 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேரும், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தலா ஒருவர் என வடக்கு மாகாணத்தில் நேற்று 86 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

## 2,610...

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 45 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 156 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## முரண்பாடு...

அரசை உருவாக்குவதே இலக்கு எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த யோசனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் வெளியேறவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா...

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையான 16.4 கிலோமீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கெடம்பே, கொஹுவல, கொம்பனித்தெருவில் நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை, பாலதகக்ச மாவத்தை மற்றும் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும் மேம்பாலங்களின் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அலரி மாளிகையில் இருந்தவாறு குறித்த வேலைத்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு பிரதமரின் தலைமையில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்றது.

அங்கு பிரதமர் உரையாற்றும்போது,

“சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய நாம் நாட்டைக் கட்டியெழுப்ப மக்களுக்கு உறுதியளித்தோம். கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலேனும் நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறுத்த வேண்டாம் என ஜனாதிபதி எம் அனைவருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தத் தொற்று நிலைமை எதுவும் இல்லாமலேயே இன்று உள்ள எதிர்க்கட்சி அன்று எந்தவொரு வேலையும் செய்யாதிருந்தது. நாம் என்ன செய்கின்றோம் என இன்று அவர்கள் எம்மிடம் கேட்கின்றனர்.

ஒரு பொறுப்புள்ள அரசாக நாங்கள் மக்களுக்குத் தடுப்பூசிகளை வழங்குவோம் என்று உறுதியளித்தோம். தடுப்பூசி மூலம் எங்கள் மக்களைப் பாதுகாக்கும் திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துகின்றோம். சில குறைபாடுகளைச் சரிசெய்ய முன்வந்துள்ளோம்.

இந்தத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த வைத்தியர்கள் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் அதை ஆதரிக்கும் மக்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சிலருக்கு அதனைச் சகித்துக்கொள்ள முடியாது. அவர்கள் இங்கேயும் அங்கேயும் சொல்லி அதை நாசப்படுத்த முயற்சிக்கின்றனர். தவறான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். தடுப்பூசி போடும்போது அவர் இறந்துவிடுவார் என்றும் கூறினர். மக்களைப் பயமுறுத்த முயன்றனர்.

எதிர்க்கட்சிக்கு நாம் சொல்வது இது போன்ற பொய்களைப் பரப்பி மக்களின் வாழ்க்கையை நாசமாக்கி அரசியல் ஆதாயம் தேட வேண்டாம். இந்தத் தொற்று நம் அனைவருக்கும் ஒரு சவால். இந்தச் சவாலை சமாளிக்க நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் தங்கள் சமூக ஊடகங்களில் அரசின் தடுப்பூசி திட்டத்தைப் பாராட்டுவதை நான் கண்டேன். இந்த நேரத்தில் இந்தச் சவாலை ஒன்றிணைந்து எதிர்கொள்வதையே நாட்டு மக்களும் நம்புகிறார்கள்.

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போது, பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால், உங்கள் அனைவரின் உயிரையும் மதிக்கின்றோம். எனவே, அரசால் மேற்கொள்ளப்படும் திட்டத்துக்கு மக்கள் தங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை உங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்கவும். பின்னர் முழு நாடும் பாதுகாக்கப்படும்.

தொற்று நிலைமையாக இருப்பினும், அனர்த்த நிலைமையாயினும் இந்தச் சூழ்நிலைகளிலும் மக்களுடன் அந்த சவாலை ஏற்றுக்கொள்ள ஓர் அரசு என்ற ரீதியில் நாம் தயார்” - என்றார். (இ)

# தமிழர்களை நாடு கடத்த வேண்டாம் ஜேர்மனியில் தொடர் போராட்டம்!

*பேர்ளின், ஜூன் 08*

ஜேர்மனியில் அகதி அந்தஸ்து கோரிய பல ஈழத் தமிழர்கள் நாடு கடத்தப்படும் நிலையில் உள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஜேர்மனிய அரசிடம் அகதி அந்தஸ்து கோரிய ஈழத் தமிழர்களை நாடு கடத்தல் தொடர்பானது எனும் தலைப்பின் கீழ் அண்மையில் ஜேர்மனியில் இருக்கும் ஈழத்தமிழ் மக்களவை மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு ஆகிய அமைப்புக்கள் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன.

அதில், ஜேர்மனியின் நடவடிக்கை எமக்கு பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தருகின்றது என குறித்த அமைப்புகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. சிறையிலுள்ள கைதிகளை பார்க்க கஜேந்திரன் எம்.பிக்கு அனுமதி மறுப்பு

*மட்டக்களப்பு, ஜூன் 08*

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸிற்கு அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர்.

இது குறித்து மேலும் அவர்கள் தெரிவிக்கையில்,

“மே 19 நினைவேந்தலை முன்னெடுத்தமைக்காக பத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் யுவதிகள் இங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

புகைப்படங்களை பயன்படுத்தியமைக்காக கைது செய்யப்பட்டவர்களும் இங்கே உள்ளனர்.

இவர்களுடைய குடும்பங்கள் மத்தியில் இவர்கள் தொடர்பில் ஆழமான கவலை காணப்படுகின்றது. அவர்கள் போதிய கொரோனா பாதுகாப்பு இல்லாமல், நெருக்கமான இடங்களிலே, தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக குடும்பத்தினர் மத்தியில் அச்சம் பரவியுள்ளது.

## வங்கிகளை...

வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் உரிய வழிகாட்டல்களைப் பின்பற்றி உரிய செயல்பாடுகளை முன்னெடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிரூபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வங்கிச் செயல்பாடுகளை 15 பேர் கொண்ட ஊழியர்களுடன் முன்னெடுக்குமாறும் மத்திய வங்கி அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

மேலும், சம்பளம் வழங்குதல், தன்னியக்க வங்கி சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுக்குமாறும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், வங்கி ஊழியர்களுக்கான பயண ஏற்பாடுகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிப்பதன் மூலம் முன்னெடுக்குமாறும், மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிரூபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## உயர்வடைகி...

பின்பற்றப்படவில்லை என்றும், நாளாந்தம் 50 வீதமான வாகனங்களினதும், பொது மக்களினதும் நடமாட்டத்தைக் கொழும்பு உள்ளிட்ட நகர்ப் பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் பயணக் கட்டுப்பாட்டின் மூலம் எதிர்பார்த்த பலன் கிடைக்காது என்றும், இதனால் அரசு கட்டுப்பாட்டை கடுமையாக நடைமுறைப்படுத்துவது அவசிமாகும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கைகளை அதிகரித்து கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் அதிகம் உள்ள பிரதேசங்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், தடுப்பூசிகளைச் செலுத்துவதற்குச் சரியான முறைமையொன்றைத் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது. (இ)

## கைதானோரு...

ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார்.

கொழும்பு -5, கிருலப்பனையில் அமைந்திருக்கும் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு இதற்கான தடுப்பு நிலையமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட ஜூன் 4 ஆம் திகதியிடப்பட்ட விஷேட வர்த்தமானி மூலமாக இது குறித்த பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

## பாரதியின்...

பூவுலகில், 69 கோடி மக்கள் பசித்த வயிற்றோடு இரவு படுக்கைக்குச் செல்கின்றார்கள் என்பது ஒரு கொடூரமான தரவு அல்லவா?!

உணவு என்பது ஒவ்வொரு மனிதரதும் உரிமை.

அதிலும், குறிப்பாக, ஆரோக்கியமான, நச்சுத்தன்மையற்ற, பாதுகாப்பான உணவு என்பதே அந்த உரிமையின் உண்மையான அர்த்தம் என்பதோடு - இந்தப் பூலோகத்தை அடுத்த உயிரினங்களோடு- பகிர்ந்து வாழ்கின்ற நாம் ஒவ்வொருவருமே, அடுத்தவர்களின் அந்த தூய உணவுக்கான உரிமையை மதிக்க வேண்டும்.

இன்று உலக உணவு பாதுகாப்பு நாள்! எனது நாட்டின் குடிமக்களுக்கான பாதுகாப்பான உணவு என்ற கொள்கையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்திருப்பதாலேயே - எவரது அல்லது எதனது அழுத்தத்துக்கும் விட்டுக்கொடுக்காமல் - எமது நாட்டின் விவசாயத்தைச் சேதனப் பசளைக்கு முழுமையாக மாற்றுவதில் நான் விடாப்பிடியாக நிற்கின்றேன்.

எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு எமது நாட்டின் விவசாயத்திலும், எமது மக்களின் உணவுப் பழக்கத்திலும் நாம் ஏற்படுத்துகின்ற இந்தப் புரட்சிகரமான மாற்றமானது - இலங்கையின் சரித்திரத்தில் தனித்துவமாக எழுதப்படும்.

உடல் ஆரோக்கியமும் மனச் செழுமையும் சிந்தனைப் பொலிவும் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் - எமது அரசோடு கைகோக்குமாறு எம் நாட்டு விவசாயப் பெருமக்கள் அனைவரையும், இன்றைய நாளில் நான் அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றேன் - என்றுள்ளது. (இ)

ஈழநாடு Eelanadu

## பொருளாதார மத்திய நிலையங்கள் இன்றும் நாளையும் திறக்கப்படும்



கொழும்பு, ஜுன் 08

மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் இன்றும் நாளையும் திறக்கப்படும். அத்துடன், அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் அங்காடி விற்பனையாளர்கள் தொடர்பில் உரிய சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தி ஆலைகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு துறைமுகத்தின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எம். வி எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் உப்பு உற்பத்தியின் ஊடாக மோசடி செய்ய திட்டமிட்டுள்ளார்கள்.

நாட்டில் உப்பு உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக வதந்தியை பரப்பி விட்டு அதனூடாக உப்பு இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளார்கள்.

இரண்டு வருட காலத்திற்கு தேவையான உப்பு நாட்டில் உள்ள அனைத்து உப்பு உற்பத்தி ஆலைகளிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே சந்தையில் உப்பு விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. உப்பு குறித்து வெளியாக பொய்யான செய்தியை மக்கள் நம்ப கூடாது. இதற்காகவே உப்பின் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் இன்றும், நாளையும் திறக்கப்படும். அனுமதி பெற்றுள்ள வியாபாரிகள் மாத்திரம் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் அங்காடி விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் தொடர்பில் பொது மக்கள் நுகர்வோர் அதிகார சபையில் முறையிடலாம் - என்றார்.

## கொழும்புக்குள் நுழையமுயன்ற 800 பேர் திருப்பியனுப்பப்பட்டனர்



கொழும்பு, ஜுன் 08

அத்தியாவசிய சேவைகள் என்ற போர்வையில் கொழும்புக்குள் நுழைய முயன்ற 800 க்கும் மேற்பட்டோர் நேற்று பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, 28 ஆயிரத்து 784 வாகனங்கள் கொழும்புக்குள் நுழைந்தன. அவற்றில் 4,802 வாகனங்கள் சுகாதார சேவையை சேர்ந்தவை.

பயண தடையை மீற முயன்ற 803 பேர் அறிவுறுத்தப்பட்டு திருப்பி விடப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாட்டை மீற முயற்சித்த 54 வாகனங்களில் 107 பேர் திருப்பி விடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினம் நிறங்களிலான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டமையால் கொழும்புக்குள் நுழையும் வழிகளில் வாகன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால்

## இந்து சமுத்திரம் முழுமையும் ஆபத்தில்! தாக்கம் பல தசாப்தங்களுக்கு தொடரும்

கொழும்பு, ஜுன் 08

**எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலுக்குள் கலக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் நுண்துண்டுகள் காரணமாக இந்து சமுத்திரம் முழுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கம் பல தசாப்தகாலத்திற்கு தொடரும் என்று மேற்கு அவுஸ்திரேலிய கடல்சார் கற்கைகள் தொடர்பான பேராசிரியர் சரித பட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக இலங்கை கடல் பரப்பில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இது குறித்து ஏற்படும் சூழலியல் பாதிப்பு குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை கூறினார்.

மேலும், கொழும்பு கடல் எல்லைக்குள் தீப்பிடித்து விபத்துக்குள்ளான எக்ஸ் - பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட கடல் பாதிப்பு காரணமாக மிகப்பெரிய ஆபத்து இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

கப்பலில் இரசாயன திரவங்கள், எண்ணெய் உள்ளிட்ட கடலுக்கு ஏற்பில்லாத பொருட்கள் கடலுக்குள் கலந்துள்ளன. இது கடல்வாழ் உயிரினங்களை மோசமாக பாதிக்கப்போகின்றது.

மீன்பிடிதுறைக்கும் இது பெரும் பாதிப்பை தாக்கத்தை ஏற்படுத்தும். கொரோனா தாக்கம் காரணமாக மக்களின் வழமையான செயல்பாடுகள் இடம்பெறவில்லை. இதனால், உண்மையான தாக்கம் என்னவென்பது பெரும்பாலான நபர்களுக்கு தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது, கப்பலில் இருந்து கடலுக்குள் பரவியுள்ள பிளாஸ்ரிக் நுண்துண்டுகள் இந்து சமுத்திரம் முழுவதும் பரவக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகக் கூறுவதாயின் சோமாலியா தொடக்கம் இந்தோனேசியா வரையிலும், இதே போன்று இந்தியா தொடக்கம் மாலைதீவு வரையிலும் இந்து சமுத்திரம் முழுவதும் இந்த பிளாஸ்ரிக் துண்டுகள் பரவியுள்ளன. இதன் பாதிப்பை சாதாரணமாகக் கணக்கிட முடியாது.

அடுத்த பல தசாப்தங்களுக்கு இதன் பாதிப்பு வெளிப்படும். இந்தத் தாக்கத்தில் இருந்து மீள வேண்டுமாயின் இருக்கும் ஒரே வழிமுறை என்னவெனில், கடலில் கலக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் துண்டுகளை முடிந்தளவு கடலில் இருந்து அகற்றியாக வேண்டும்.

அதனை அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் இலங்கை கடற்படை இணைந்து வேறு எவரையேனும் இணைத்துக்கொள்ள முடியுமென்றால் அவர்களையும் இணைத்துக்கொண்டு உடனடியாக இந்த செயலில் இறங்க வேண்டும்.

வியாபார நோக்கமாக மாத்திரம் இந்த செயல்பாடுகளை கருத்தில் கொள்ளாது எமது கடல் வளத்தை பாதுகாக்க, கடல் உயிரினங்களை பாதுகாக்கும் நோக்கத்தில் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## சிறப்பு பிரிவினருக்காக 450,000 தடுப்பூசி ஒதுக்கீடு

கொழும்பு, ஜுன் 08

சினோபார்ம் கோவிட்-19 தடுப்பூசி ஏற்றலின் இரண்டாம் கட்டம் இன்று முதல் ஆரம்பமாகிறது. இந்த நிலையில் சிறப்பு பிரிவினருக்காக 12 மாவட்டங்களுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் டோஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

12 மாவட்டங்களில் முதியோர், கர்ப்பவதி தாய்மார் மற்றும் அரச ஊழியர்களுக்காகவே இந்த 4 இலட்சத்து 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 10 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளிலிருந்தே இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியை விநியோகிக்கும் பணிகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## சிறுவன் திடீர் மரணம்!

மட்டக்களப்பு, ஜுன் 08

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதியில் சிறுவன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று காலை 6 மணியளவில் திடீரென சோர்வடைந்த நிலையில் குறித்த சிறுவன் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

14 வயதான முஹமது இஸ்மாயில் முஹமது பிர்னாஸ் எனும் சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுவன் பாம்பு தீண்டி உயிரிழந்திருக்கலாம் என்று குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறுவனின் மரணம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சீரற்ற காலநிலையால் 19 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜுன் 08

நாட்டில் நீடித்து வரும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி நேற்று வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது.

தொடர்ச்சியாக சீரற்ற காலநிலை நீடித்து வருவதையிட்டு, 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று மாலை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 04 - 1940



உதிர்வு 06 - 06 - 2021

### கந்தையா மகாலிங்கம்

யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் கடந்த (06-06-2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்–புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், திலகவதியின் ஆருயிர்க் கணவரும்,சாரதா, ரூபவதி, சிவகுமார், ரஞ்சனா, ஸ்ரீகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமார், சிவானந்தகுமார், ஜெயா, சிவகுமார், சத்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரஸ்வதி, சண்முகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் இராசகிளி, மலர், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், கௌரீஸ்வரி, அப்புலிங்கம், இரத்தினபூபதி, கமலாம்பிகை, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஹரிசாந், நிருஷாந், கபிஷா, கபிஷன், பிரியங்கா, துஷாந், பிருத்திகா, அநேகன், சசீவன், துங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 61B, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல்.
தொடர்புகளுக்கு :
ஸ்ரீகுமார் (மகன்) +447577392578

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நாய்கள்
யாக்கிருதை,முண்டாசுபட்டி
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி

5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-சினிமா தகவல்கள்



6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி
திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு